வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 21.04.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 112 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை




**07** தூண்டில் போடும் விக்கியரும் தூர ஓடும் தலைவர்களும்!



**08** முன்னாள் ஜனாதிபதிகளின் அரசியல்



**09** தலைவரில்லா 'வீடு'க்குள்ளிருந்து சிதறலாக வரும் பல குரல்கள்!



**10** மதத்திவிரவாதம் முந்திச்செல்வதற்கு முன்னதாக செய்யவேண்டியது என்ன?

### வளைகுடா நாடுகளில் பதற்றம்:

# தனது இலங்கைப் பயணத்தை ஒத்திவைத்த ஈரான் ஜனாதிபதி!

கொழும்பு, ஏப்ரல் 21

**ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இலங்கைக்கு பயணம் செய்யும் திகதி இன்னும் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப் படவில்லை என வெளிவிவகார அமைச்சின் வட்டாரங்களில் அறிய முடிந்தது.**

உமா ஓயா பல்நோக்குத் திட்டத்தை மக்களிடம் கையளிக்கும் நோக்கில் ஈரான் ஜனாதிபதி எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு பயணம் செய்ய திட்டமிட்டிருந்தார்.

ஆனால், ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே நிலவும் பதற்றமான சூழல் காரணமாக இந்த பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈரான் ஜனாதிபதியின் இலங்கைப் பயணத்தின் திகதி இன்னும்

15

## ஆயிரத்து 800 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றம்!

கொழும்பு, ஏப். 21

கடந்த 2 வருடங்களுக்குள் 1,800 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜேசிங்க இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

குறித்த காலப்பகுதியில் சுமார் 300க்கும் மேற்பட்ட விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை பொது வைத்திய சாலையில் சேவையாற்றி வந்த மூன்றாவது மயக்க வியல் வைத்திய நிபுணரும், அதிகாரிகளுக்கு

15

## ஐக்கிய மக்கள் சக்தியை கண்டு அச்சம் கொள்கிறது அரசாங்கம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

மட்டக்களப்பு, ஏப். 21

ஐக்கிய மக்கள் சக்தி எந்த அரசாங்கத்துக்கும் அச்சப்படும் கட்சி அல்ல. ஆனால், அரசாங்கம் ஐக்கிய மக்கள் சக்தியைக் கண்டு அச்சம் கொள்கிறது.- இவ்வாறு அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் இனவாதச் செயல்பாடுகளுக்கும் இன மத ரீதியான முரண்பாடுகளுக்கும் ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை. அதற்கான

15

## ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா?



### விக்னேஸ்வரன் எம். பி. சந்தேகம்

யாழ்ப்பாணம், ஏப். 21

ஜனாதிபதித் தேர்தல் வருகின்றதோ இல்லையோ நானறியேன். அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுமோ என்றும் கூற முடியாது. - இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம், பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கட்டமைத்த இனவழிப்பும் தமிழ் மக்களின்

15

## ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 21

இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில், ஏற்றுமதி வருமானம் கடந்த ஆண்டை விட 7.9 வீதம் அதிகரித்து 1,059 மில்லியன் டொலர்களாக உள்ளது.

மேலும், இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான செலவு 35 வீதம் அதிகரித்து 1,378 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2023 பெப்ரவரியில் 39 மில்லியன் டொலராக இருந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை இந்த ஆண்டு பெப்ரவரியில் 319 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி அறிக்கைகள் காட்டுகின்றன. (அ)

## யாழ். பல்கலை உயர்பட்டப்படிப்புக்கள் பீடாதிபதியாக பேராசிரியர் வேல்நம்பி!

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாக சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசனின் பதவிக்காலம் எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான விசேட பேரவை அமர்வு நேற்று பிற்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா

15



## இலங்கைக்கு உதவும் ஒபெக்

கொழும்பு, ஏப். 21

திட்ட அடிப்படையிலான நிதியுதவியின் ஊடாக இலங்கைக்கு உதவுவதற்கு தீர்மானித்துள்ளதாக ஒபெக் நிதியம் தெரிவித்துள்ளது.

தம்முடனான சந்திப்பின் போது, ஒபெக் நிதியத்தின் தலைவர் அப்துல்ஹமீட் அல்கலிபா இதனை அறிவித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தமது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்டுவரும் பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு அவர் பாராட்டுக்களை

15

## ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை வெளிவராத 8 உண்மைகள்!

### சி.ஐ.டிக்கு வழங்கிய கொழும்பு பேராயர் இல்லம்

கொழும்பு, ஏப். 21

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளிவராத உண்மைகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்வைத்ததாக கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளர் அருட் தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இதனைக் கூறினார்.

முன்னாள்

15

## ஈரான் - இஸ்ரேல் மோதல் நிலையால் இலங்கை பொருளாதாரத்தில் தாக்கம்

### பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 21

ஈரான்-இஸ்ரேல் மோதல்கள் தொடருமாயின் ஈரானுடன் கையாளப்படும் இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

எரிபொருளை இறக்குமதி செய்வதில் இலங்கை ஈரானுடன் நேரடி தொடர்புகளை கொண்டிருக்காவிடினும் இலங்கை எரிபொருளை கொள்வனவு செய்யும் நாடுகளுக்கு ஈரானே பிரதான

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# நாட்டில் கடும் வெப்பநிலை

கொழும்பு, ஏப். 21

நுவரெலியா, கண்டி, மாத்தளை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களைத் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் நேற்று கடுமையான வெப்பநிலை நிலவியதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி வடக்கு, கிழக்கு, வட மத்திய, வடமேல்,மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் நேற்று அதிக வெப்பமான காலநிலை நிலவியது.

இந்நிலையில் , மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களில் நேற்று வெப்பநிலை மட்டம் மிகவும் அதிகரித்துள்ளது.

நாட்டில் வெப்பநிலை அதிகரித்து வருவதால் பொதுமக்கள் அனைவரும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறித்த திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# சயனொளிபவன் முகுந்தன் பேராசிரியராக பதவியுயர்வு

யாழ்ப்பாணம், ஏப். 21



யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரை யாளர் ஒருவர் பேரா சிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள் ளார். இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் துணைவேந்தர், பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சயனொளிபவன் முகுந்தனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சயனொளிபவன் முகுந்தன் இந்து நாகரிகத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (எ)

# மரக்கறிகளின் விலை உயர்வு!

கொழும்பு, ஏப். 21

பேலியகொடை பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று மரக்கறிகளின் விலைகள் அதிகரித்து காணப்பட்டன.

அதன்படி, ஒரு கிலோ தேசிக்காய் 1,000 ரூபாவாகவும், ஒரு கிலோ இஞ்சி 2,800 ரூபாவாகவும் காணப்பட்டது.

ஒரு கிலோ தக்காளி 80 ரூபாவாகவும், ஒரு கிலோ கரட் 150 ரூபாவாகவும், ஒரு கிலோ கத்தரிக்காய் 100 ரூபாவாகவும், ஒரு கிலோ பீன்ஸ் 300 ரூபாவாகவும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 150 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது.

ஒரு கிலோ லீக்ஸ் 150 ரூபாவாகவும், ஒரு கிலோ முட்டைக்கோஸ் 120 ரூபாவாகவும்,ஒரு கிலோ பீட்ருட் 200 ரூபாவாகவும்,ஒரு கிலோ கறி மிளகாய் 400 ரூபாவாகவும், ஒரு கிலோ புடலங்காய் 120 ரூபாவாகவும், ஒரு கிலோ பீர்க்கங்காய் 100 ரூபாவாகவும், ஒரு கிலொ பூசணிக்காய் 150 ரூபாவாகவும், ஒரு கிலோ வெங்காயத்தாள் 150 ரூபாவாகவும், ஒரு கிலோ வாழைக்காய் 150 ரூபாவாகவும் காணப்பட்டது. (அ)

# வயலில் வேலை செய்தவர் மயங்கிச் சரிந்து மரணம்!

மூதூர், ஏப். 21

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவெளி குளத்து வயலில் வேலை செய்து கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார். இந்த சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை மதியம் இடம்பெற்றது.

மூதூர் - பாலத்தடிச்சேனை கிராமத்தில் வசித்து வந்த 3 பிள்ளைகளின் தந்தையான சூரியமூர்த்தி சுதாகரன் (வயது - 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மயக்கமுற்று விழுந்ததாகவும் உடனடியாக மூதூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாகவும் தெரிய வருகின்றது.

தற்போது நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக இவர் உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. வெயிலில் நின்று வயல் வேலை செய்கின்றவர்கள் வெயில் உச்சமான நேரங்களில் வயல் வேலை செய்வதைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (எ)

# வண்டுகள் நிறைந்த உலருணவு திடீர் சோதனையில் சிக்கியது

சாய்ந்தமருது , ஏப். 21

சுகாதாரமற்ற உணவுப்பொருட்கள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதைத் தடுத்து உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவைப் பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய சாய்ந்தமருதில் நேற்று திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சாய்ந்தமருதின் பிரபல கடைகளில் பாவனைக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த தானியங்கள், வண்டுகள் மற்றும் புழுக்கள் நிறைந்த உணவுகள் மனித பாவனைக்குப் பொருத்தமற்ற உலருணவுகள், மனித ஆரோக்கியத்துக்கு கேடுவிளைவிக்கும் பொருட்கள், முறையான களஞ்சிய வசதிகள் மேற்கொள்ளப்படாத உணவுப் பண்டங்கள் என்பன அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# பெண் அபிவிருத்தி உத்தியோகத்தர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

## கொலையா? இயற்கை மரணமா? என்று தெல்லிப்பழை பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 21

அபிவிருத்தி உத்தியோகத்தரான இளம் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - சகாயபுரம் பகுதியிலுள்ள தோட்டக் கிணற்றிலிருந்து இவரது சடலம் மீட்கப்பட்டது. குறித்த பெண் தண்ணீர் எடுக்க முற்பட்டபோது வலிப்பு ஏற்பட்டதால் கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் கூறினர்.

இவ்வாறு உயிரிழந்த பெண் நீண்டகாலமாக வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததாக பொலிஸாரிடம் வழங்கிய வாக்குமூலத்தில் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் இது இயற்கை மரணமா? அல்லது கொலையா? என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய 37 வயது பிரதீபன் நித்யா என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தார். (எ)

# யாழ் பல்கலைக்கழக நிதியாளருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எதிரா கப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் முன்னாள் தலைவர் துஷானி சயந்தன், பல்கலைக்கழகச் சட்டத்துக்கு விரோதமான முறையில் நிதியாளர் தனது சம்பளத்தை நிறுத்தியதனால் தனது வாழ்வாதாரம் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஏழாண்டு விடுமுறையை நிறைவு செய்துகொண்டு குறிப்பிட்ட திகதியில் தான் கடமைக்குத் திரும்பியபோதிலும் தனக்கு அரைமாதச் சம்பளத்தை வழங்கிவிட்டு எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குத் தனது வாழ்வாதாரத்தைச் சவாலுக்குட்படுத்தும் வகையில் தனது சம்பளத்தை நிறுத்தியமை தவறு என்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகம் முன்னெடுத்துள்ளது.

2 கோடி ரூபாய் பெறுமதியான

# கொக்கெய்ன் போதைப்பொருளுடன் கினி நாட்டு பெண்கள் இருவர் கைது

கொழும்பு, ஏப். 21

இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்களுடன் கினி நாட்டைச் சேர்ந்த பெண்கள் இருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் துருக்கி இஸ்தான்புல் நகரத்திலிருந்து விமானம் மூலம் நேற்றுக்காலை 6 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதிகாரிகள் அவர்களை சோதனை செய்த போதே 500 கிராம் நிறையுடைய 40 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட கொக்கெய்ன் போதைப் பொருட்கள் 2 கோடி ரூபாய் பெறுமதியானது என விசாரணையில் தெரியவந்தது.

விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான இரண்டு பெண்களும் மேலதிக சட்டநடவடிக்கைக்காக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். (எ)

# சுகாதார நடைமுறைகளை மீறிய வர்த்தகர்கள்மீது சட்டநடவடிக்கை

கல்முனை, ஏப். 21



கல்முனை மாநகர பொதுச்சந்தையில் உணவுப் பொருட்கள் நேற்று பரிசோதனை செய்யப்பட்டன. இதன்போது, சுகாதார நடைமுறைகளை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி எம். அஸ்மி தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்மைய பொதுச் சந்தையிலுள்ள வர்த்தக நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள், உணவு விற்பனை நிலையங்கள் பரிசோதனை செய்யப்பட்டதுடன் பொதுச் சந்தை வர்த்தகர்களுக்கு சுகாதார ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, பாவனைக்கு உதவாத மரக்கறி வகைகள் கைப் பற்றப்பட்டதுடன் சுகா தாரத்துக்கு பொருத்தமற்ற முறையில் காணப்பட்ட வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நட வடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அஸ்மி தெரிவித்தார். (எ)

ஈழநாடு



# ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் யாரென சந்தேகம்!

## சமூகம் மற்றும் மதத்திற்கான நிலைய ஆராய்ச்சி குழு அறிக்கை

கொழும்பு, ஏப். 21

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த எச்சரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டமையும் தடையற்ற விதத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையும் நீதிவழங்குவது குறித்து அரசாங்கத்தின் அக்கறையின்மை அலட்சியமும் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளதாக சமூகம் மற்றும் மதத்திற்கான நிலையத்தின் ஆராய்ச்சி குழு தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இன்னமும் நீதிக்காக காத்திருத்தல் என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள சமூகம் மற்றும் மதத்திற்கான நிலையத்தின் ஆராய்ச்சி அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மூன்று ஆடம்பர ஹோட்டல் ஒரு விடுதி மற்றும் வீடொன்றை இலக்குவைத்து 2019 ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்களை இலங்கையில் யுத்தத்தின் பின்னர் இடம்பெற்ற ஈவிரக்கமற்ற படுகொலை என தெரிவிக்கலாம்.

ஆண்டவனின் முழங்காலின் கீழ் நின்றுகொண்டிருந்த-தங்களின் உயிர்த்த ஞாயிறு காலை உணவை அருந்திக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். பலர் மிகவும் ஆபத்தான காயங்களினால் பாதிக்கப்பட்டனர்.

எண்ணிக்கை அடிப்படையில் அந்த தாக்குதல் 314 உயிர்களை பறித்தது. 600 பேர் காயங்களால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 45 சிறுவர்களும் உலகின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 40 வெளிநாட்டவர்களும் உள்ளனர்-வெளிநாட்டவர்கள் பாதிக்கப்பட்டதால் இது இந்த துயரம் குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்தது.

பாதிக்கப்பட்ட பலர் இன்னமும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் சத்திரசிகிச்சைக்கு தங்களை உட்படுத்திவருகின்றனர். அவர்கள் கடும் மன அழுத்தத்திற்குள்ளாகியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் கறுப்பு பக்கங்களை என்றும் இலங்கையின் வரலாற்றிலிருந்து அழித்துவிடமுடியாது.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் நீதிக்காக குரல்கொடுத்துவரும் அதேவேளை தங்களின் அளவிட முடியாத இழப்பை இன்னமும் துயருடன் நினைவுகூர்ந்தவண்ணமுள்ளனர்.

2024 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுதாக்குதல் இடம்பெற்று ஐந்து வருடங்களாகின்ற நிலையில் இன்னமும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

பாதிக்கப்பட்ட அனைவரும் நீதி நிலைநாட்டப்படவேண்டும் இந்த விவகாரத்திற்கு முடிவுகாணவேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

இந்த தாக்குதல் இடம்பெற்ற மறுநாள் சஹ்ரான் ஹாசிம் தலைமையிலான தேசிய தவ்ஹீத் ஜமாத் என்ற அமைப்பே இந்த தாக்குதலிற்கு காரணம் என இலங்கை அரசாங்கம் குற்றம்சாட்டியிருந்தது.

இந்த தாக்குதல் இடம்பெற்று ஒருவாரத்தின் பின்னர் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன என்.டி.ஜே என்ற அமைப்பே இந்த தாக்குதலிற்கு முக்கிய காரணம் என தெரிவித்து அந்த அமைப்பையும் ஜமாத்தே மிலாத்து இப்ராஹிம் என்ற அமைப்பையும் தடை செய்தார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து ஆராயும்போது இலங்கையின் அரசாங்கம் எவ்வளவு பாரிய பாதுகாப்பு தவறை இழைத்தது என்பதை புறக்கணிக்க முடியாது.

கத்தோலிக்க திருச்சபை சமூகத்தையும் மனித உரிமை சமூகத்தையும் சேர்ந்த பலர் உயிர்த்த ஞாயிறுதாக்குதல் தொடர்பான விடயங்கள் மூடிமறைக்கப்படுவதாக கருதுகின்றனர்.

புலனாய்வு அமைப்பினருக்கு நீண்டகாலமாக தீவிரவாதிகள் குறித்து தகவல் தெரிந்திருந்தது எனவும் தேவாலயங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற முன்கூட்டியே தகவல்கள் கிடைத்திருந்தது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயர் அதிகாரிகளுக்கு கூட இது குறித்த விடயங்கள் தெரிந்திருந்தன என்ற விவரங்களும் சந்தேகநபர்களுக்கும் புலனாய்வுப் பிரிவினருக்கும் இடையில் தொடர்பிருந்தது என்ற விடயங்களும் தெரியவந்துள்ளன.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த எச்சரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டமையும் தடையற்ற விதத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையும் நீதிவழங்குவது குறித்து அரசாங்கத்தின் அக்கறையின்மை அலட்சியமும் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது குறித்த கேள்விகளை எழுப்புகின்றன.

சமீபத்தில் வெளியான சனல்4 வீடியோ உயிர்அதிகாரியொருவருக்கும் ராஜபக்ச அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து வெளிப்படுத்தியுள்ளது.

எனினும் இந்த விடயங்கள் குறித்து மேலதிக விசாரணைகள் அவசியம்-என்றுள்ளது. (அ)

# முதலை கடித்து முதியவர் பலி!

## வாழைச்சேனையில் சம்பவம்



மட்டக்களப்பு, ஏப். 21

முதலை கடித்த நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொண்டுகள்சேனை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காலாந்தனைப் பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான நபர் ஒருவரே முதலை கடித்து உயிரிழந்துள்ளார்.

பொன்டுகள்சேனை நீரோடையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, முதலை கடித்து நீருக்குள் இழுத்துச் சென்றதினால் அவர் மரணமடைந்தார் என பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

மரணமடைந்த நபரின் உடலை மரண விசாரணை அதிகாரி ரமேஸ் நேரில் சென்று பார்வையிட்டு வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஏப். 21

கட்டானை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, இவரிடமிருந்து 800 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இவர் புளுமெண்டல் பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதுமட்டுமன்றி, பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் கட்டானை பொலிஸ் நிலையத்தில் இருந்து சீதுவ பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு, இவர் கடமைக்கு சமூகமளிக்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இவர் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு கூறியும் நிறுத்தாமல் சென்றமையினால் பின் தொடர்ந்து சென்ற பொலிஸார் அதனை நிறுத்தி சேதனையிடப்பட்டுள்ளனர்.

இதன்போது, பொலிஸ் கான்ஸ்டபிள் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதோடு, சில காலமாக போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# மக்கள் விடுதலை முன்னணி அன்று செய்த தவறை இன்றும் செய்கிறது!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஏப். 21

நாட்டைக் காப்பாற்ற வருவோம் என்று தம் பட்டம் அடித்தவர்கள் அன்று 60,000 இளைஞர்களின் உயிர்களை பறித்தவர்கள். ஆனால் இன்று இளைஞர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குச் செல்வதைத் தடுப்பதன் மூலம் அன்று செய்த தீங்குகளை மக்கள் விடுதலை முன்னணி இன்றும் செய்துவருகிறது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

உமண்தாவ பௌத்த உலகளாவிய கிராமத்தில் நடைபெற்ற இஸ்ரேலில் விவசாயத் துறையில் தொழில் வாய்ப்புகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கான முதலாவது வதிவிட பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டம் மூலம் இஸ்ரேலில் விவசாயத் துறையில் வேலை செய்பவர்களுக்கு விரிவான பயிற்சி மற்றும் மன உறுதியை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சவால்களை எதிர்கொண்டு தமது பணிகளை வெற்றிகரமாகச் செய்வதற்கும் நாட்டுக்கு மீள வந்த பின்னர் தொழில்முனைவோராக வெற்றி பெறுவதற்குத் தேவையான பயிற்சிகள் இங்கு வழங்கப்படும்.

எங்களின் முதன்மை நோக்கம் விவசாய தொழில் மற்றும் நிர்மாணத்துறை பயிற்சி அளிப்பதன் மூலம் வாழ்க்கையை கற்பிப்பதாகும். நாட்டில் விவசாயத் தொழிலுக்கு பயிற்சி அளிக்க பல நிறுவனங்கள் உள்ளன. இருப்பினும் நீங்கள் வாழ்க்கையைக் கற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் எதுவும் இல்லை. மனிதவளத்தை உருவாக்க வேண்டும் என்றால் அதற்கான ஒரே இடம் உமண்தாவ என்று முடிவு செய்தோம். தேவையான ஒழுக்கமான சூழலும் மனவலிமையை அளிக்கக் கூடிய சூழல் இங்கு உள்ளது.

விவசாயத் தொழில் எப்படி நவீனப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இங்கு அனுபவபூர்வமாக காண முடிகிறது. பரந்து விரிந்த அறிவை இங்கு பெற்றுக்கொள்ள முடியும். இஸ்ரேல் உட்பட பல நாடுகளுக்கு இளைஞர்களை அனுப்புகிறோம். இவர்கள் வெளிநாடு சென்று திரும்பி வர வேண்டிய சூழலை உருவாக்க விரும்புகிறோம், பணத்தைப் மாத்திரம் தேட அல்ல , தோல்வியடையாது வாழ்க்கையை வெல்லும் குழுவாக மாற்ற வேண்டும் என்பதற்காகவே இத்திட்டத்தை இன்று ஆரம்பிக்கிறோம் - என்றார். (அ)

# கனடா கொலைச் சம்பவம் பிணை கோராத சந்தேகநபர்!

ஒட்டாவா, ஏப். 21

கனடாவின் ஒட்டாவா நகரில் இலங்கையைச் சேர்ந்த 06 பேரைக் கொலை செய்ததாகக் கூறப்படும் 19 வயதுடைய இலங்கையைச் சேர்ந்த சந்தேக நபர் பிணைக் கோரவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவரது சட்டத்தரணியின் அறிக்கையை மேற்கோள் காட்டி இந்த செய்தி வெளியாகியுள்ளது.

பெப்ரியோ டி சொய்சா என்ற சந்தேக நபருக்கு எதிராக 6 கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

சந்தேக நபரின் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் இவான் லிட்டில், பிணைக் கோரி விண்ணப்பிக்கும் திட்டம் தற்போது சந்தேக நபருக்கு இல்லை என்றும் கனடாவில் கல்வி பயின்று வந்த டி சொய்சா, அடுத்த வாரம் மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இலங்கை தூதரகத்தை வெலிங்டனில் திறப்பதற்கான ஏற்பாடுகள் தீவிரம்!

கொழும்பு, ஏப். 21

நியூசிலாந்தின் தலைநகர் வெலிங்டனில் இலங்கையின் தூதரகத்தைத் திறப்பதற்கான ஏற்பாடுகளுக்காக வெளிவிவகார அமைச்சின் குழுவொன்று நியூசிலாந்து செல்லவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குறித்த குழுவினர் அங்கு தங்கியிருப்பார்கள் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. நியூசிலாந்தின் வெலிங்டனில் இலங்கையின் தூதரகத்தைத் திறப்பதற்கு முன்னதாக அமைச்சரவை அனுமதி வழங் கப்பட்டுள்ளது.

இதன்படி, வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டுச் சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட தரப்பினர் நியூசிலாந்துக்கு செல்லவுள்ளனர். (அ)

### ஈரான் ஜனாதிபதியின் வருகை:

# சர்வதேச புலனாய்வு பிரிவின் கண்காணிப்புக்குள் இலங்கை!

கொழும்பு, ஏப். 21

**ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இலங்கை வருகையை இஸ்ரேலின் மொசாட் புலனாய்வு சேவையும், அமெரிக்க எப்.பி.ஐ உளவுத்துறையும் கண்காணித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.**



உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொள்வதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி எதிர்வரும் புதன்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிலையில், இலங்கையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ளதோடு, ஈரானிய சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குழுவொன்று அண்மையில் இலங்கைக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகவும், சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, கொழும்பிற்கு அழைத்து வரப்படும் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# புதிய சட்டமூலத்திற்கு எதிராக எவரும் நீதிமன்றம் செல்லலாம்

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 21

புதிய மின்சார சட்டமூலத்திற்கு எதிராக எவரும் நீதிமன்றத்தை நாட முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மின் கட்டணத்தை குறைப்பதே புதிய மின்சார சட்டமூலத்தின் நோக்கம் எனவும் அவர் கூறினார்.

அதற்கான இரண்டு வழிமுறைகளில் இரண்டாவதான நிர்வாகச் செலவைக் குறைப்பதனையே தற்போது மேற்கொள்ளவுள்ளோம் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதன் முதலாவது வழிமுறையான மின்னுற்பத்தி செலவைக் குறைப்பதற்கு, எரிபொருளில் இயங்கும் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு பதிலாக மீள்புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டங்களை எதிர்காலத்தில் கொண்டுவரவுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)



# செஹான்-மார்ட்டின் ரைசர் சந்திப்பு

கொழும்பு, ஏப். 21

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆகியோருக்கு இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வொசிங்டன் டிசியில் இடம்பெறும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றின் தலைமையிலான வருடாந்த வட்டமேசை மாநாட்டின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நிதித்துறை, தனியார் முதலீடு உள்ளிட்ட சகல துறைகளுக்குமான மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான சீர்திருத்தங்கள் என்பன தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

# இந்திய மக்களவைத் தேர்தலில் வாக்களித்த முதல் இலங்கை அகதி

சென்னை, ஏப். 21

இந்தியாவின் தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள, நளினி என்ற பெண் இந்திய மக்களவைத் தேர்தலில் வாக்களித்த முதல் இலங்கை அகதி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.




திருச்சி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள நளினி என்ற பெண்ணுக்கு, இம்முறை திருச்சி பாராளுமன்றத் தொகுதியில் வாக்களிக்க வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் முதல் முறையாக இவருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வாக்களித்த பின்னர் கருத்து தெரிவித்துள்ள நளினி,

"இலங்கைத் தமிழர்களுக்கான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள வர்களை, மாவட்ட நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள், ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் கண்காணிப்புடன் வைத்திருப்பார்கள்.

அதனால் இங்குள்ள மக்கள் மன உளைச்சலில் காணப்படுகின்றனர்.

எங்களை இலங்கைத் தமிழர் என்று தெரிவிப்பதை விட, இந்திய வம்சாவளியினர் என்று அதிகாரிகள் அடையாளப்படுத்த வேண்டும் என்பதே எங்களின் விருப்பம்" என கண்ணீர் மல்க குறிப்பிட்டார். (அ)

# இணையவழியூடான கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பல நிராகரிப்பு

கொழும்பு, ஏப். 21

இணையவழி மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தவர்களில் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக, குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

தொழில்நுட்ப அறிவு இல்லாததாலும், சில ஆவணங்கள் முறைசாரா முறையில் புதுப்பிக்கப்பட்டதாலும், அவர்களின் கடவுச்சீட்டு அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தலைமையில் பொது பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் இந்த விடயங்கள் குறிப்பிட்டார்.

இதன் அடிப்படையில் 75 வீதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இணையவழி கடவுச்சீட்டு விண்ணப்ப முறை அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து 51 பிரதேச செயலக அலுவலகங்களில் கைரேகை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் 03 நாள் மற்றும் சாதாரண சேவைகளின் கீழ் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை மேற்கொள்ள முடியுமென்றும், அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுச் சேவைகளின் கீழ் 192,041 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் 90,817 பேரது கைரேகை பிரதேச செயலகங்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவர்களுள் 55,600 பேரின் கடவுச்சீட்டுகள் அச்சிடப்பட்டன. மேலும் 03 நாள் விரைவு சேவையின் கீழ் 22,471 பேர் இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். அவர்களில் 18,770 பேரின் கைரேகைகள் பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 17,904 பேரின் பேரின் கடவுச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன.

இணையவழியில் விண்ணப்பிக்கும் போது சிலர் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை புகைப்படங்களை தெளிவற்ற முறையில் பயன்படுத்தியிருப்பதாலும், சிலர் வேறு நபர்களின் கையடக்க தொலைபேசி எண்களில் விண்ணப்பித்திருப்பதாலும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டுகளை அச்சிட முடியவில்லை-என்றார். (அ)

# கட்சிகள் ஒன்றிணைவதை நாங்கள் வரவேற்கின்றோம்

### கூறுகிறார் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஏப். 21

மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக அனைத்து கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டாலும் அதனை தாம் வரவேற்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில், சந்திரிகா, சஜித், மகிந்த, கோட்டாபய மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஒன்றாக இணைந்து எங்களுக்கு எதிராக போட்டியிடுவார்களாக இருந்தால் அப்போதுதான் எங்களுக்கு கிடைத்த வெற்றி.

எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து வர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அதனை நாம் விருப்பத்துடன் வரவேற்போம்.

கடந்த 1947 ஆம் ஆண்டில் இருந்து ஆட்சி செய்த அனைவருமே இந்த நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்தனர். எனவே இவர்கள் ஒன்றாக இணைந்து எம்மை எதிர்க்கும் போது அதனை மக்களுக்கு இலகுவாக அடையாளம் காட்டமுடியும்.

நாட்டில் தீய விளைவுகளை ஏற்படுத்தியவர்கள் இவர்களே. நாட்டுக்கு துரோகம் செய்தவர்கள் இவர்களே நாட்டை கொள்ளையடித்தவர்களும் இவர்களே. எமது பக்கம் இருப்பவர்கள், நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள்.

புதிய வேலைத்திட்டங்களுடன், புதிய அரசியல் தலைவருடன் மக்களின் திசைக் காட்டியாக எம்முடன் பலர் இருக்கின்றார்கள்.

இன்னும் இரு நாட்களில் குறித்த இரு குழுக்கள் குறித்து நாட்டு மக்களுக்கு தெரியவரும் என நினைக்கின்றேன். சுதந்திர கட்சியை தற்போது சந்திரிகாவின் காலடியில் வைத்துள்ளனர்.

பொதுஜன பெரமுனவில் அநேகமான அமைச்சர்கள் தற்போது ரணிலுடன் இருப்பதாக கூறப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்திக்கும் தற்போது வலை வீசப்பட்டுள்ளது - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
21.04.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலில் வாய்ப்புக்களை தவறவிட்டால்?

அரசியல் என்பது சாத்தியங்களை கையாளும் கலை என்று ஒரு கூற்றுண்டு - ஏனெனில் அரசியல் என்பது துல்லியமான விஞ்ஞானமல்ல - அதாவது, அரசியலில், சில சமன்பாடுகளின் துணை கொண்டு பெறுபேறுகளை காணமுடியாது. அரசியல் என்பது அடிப்படையில் அதிகாரத்தை கைப்பற்றுவற்கான ஓர் இடையறாத இயங்குநிலை. இந்த இயங்குநிலையில், ஏற்றங்களும் இறங்களும் ஏற்படலாம் - ஏற்றம்வருகின்ற போது, அது ஒரு வகையான ஆட்டமாகவும். மறுபுறமாக, இறங்கங்கள் வருகின்ற போது, அது இன்னொரு வகையான ஆட்டமாகவும் அமையும். இதனை புரிந்து கொண்டுதான் அரசியலில் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

தமிழ் தேசிய அரசியல் வரலாற்றை எடுத்துக் கொண்டால் வாய்ப்புக்கள் கிடைக்கவே இல்லை என்று எவருமே வாதிட முடியாது - ஆனால் அந்த வாய்ப்புக்களை, குறிப்பிட்ட காலத்தில் இருந்த அரசியல் தலைமைகள், தூர நோக்குடன் கையாளவில்லை என்பது வரலாறு. கழிந்து செல்லும் நாட்கள் எல்லாம் வாழ்நாட்கள் என்று கூறுவது போன்று, அரசியலில் தவறவிடப்படும் வாய்ப்புக்கள் அனைத்தும் நமது அரசியல் இலக்கை சிதைக்கும் விடயங்களாகும்.

ஏனெனில் ஒரு காலகட்டத்தில் கிடைக்கும் வாய்ப்பு இன்னொரு காலகட்டத்தில் கிடைக்கப் போவதில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் நாம் எதிர்பார்த்தவாறு அரசியலை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாவிட்டால், நாம் மேலும் பின்னடைவை சந்திப்போம். அது போராடாமல் இருந்திருந்தால் கூட, அவ்வாறானதொரு நிலையை நாங்கள் அடைந்திருக்க மாட்டோம் என்னும் நிலைமையை ஏற்படுத்தும்.

தமிழர் அரசியல் நகர்வுகளை உற்றுநோக்கினால் வாய்ப்புக்களை தவறவிட்ட ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் எவ்வாறு, தமிழர் அரசியலை மோசமாக பாதித்திருக்கின்றது என்பதை நாம் காணலாம். வாய்ப்புக்களை தவறவிடுகின்ற போது இரண்டு விடயங்களே நிகழ முடியும் - ஒன்று, வாய்ப்புக்கள் மீண்டும் கிடைக்கும் வரையில் காத்திருக்க வேண்டும் - அதில் ஓர் ஆபத்துண்டு - அதாவது, வாய்ப்புக்கள் மீண்டும் கிடைக்காமலேயே போகலாம். இரண்டு, எங்களுடைய முயற்சிகளால் புதிய வாய்ப்புக்களுக்கான கதவுகளை திறப்பது.

இன்று தமிழர் அரசியல் இவ்வாறானதொரு நிலையில்தான் இருக்கின்றது. வாய்ப்புக்களை தமிழர்கள்தான் உருவாக்க வேண்டும். கடந்த பதினான்கு வருடகால அனுபவங்கள் இதனை தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. இந்த காலத்தின் எதிர்பார்ப்புக்கள் எவையும் ஈடேறவில்லை - ஈடேறப் போவதுமில்லை. ஏனெனில் ஈழத்தமிழர்கள் பலமான ஒரு சர்வதேச நண்பனை சம்பாதித்துக்கொள்ளவில்லை. இந்து சமுத்திர பிராந்தியத்தை பொறுத்தவரையில் - இந்தியாவை தாண்டி அவ்வாறானதொரு நண்பனை பெறவும் முடியாது.

அதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தும், அதனை தமிழர் தரப்பு அறியாமையாலும் மற்றும், விடயங்களை தூரநோக்கில் அணுகத் தவறியதாலும், பலவான் நண்பனை பெறும் பாக்கியத்தை இழந்துபோனது. 1980களுக்கு பின்னரான சூழலில், பிராந்திய சக்தியான இந்தியாவின் பரிபூரண நடப்பு, ஈழத் தமிழர்களின் காலடியில் இருந்தது. ஆனால் - பேருந்தை தமிழர் தவறவிட்டனர். இனி அது பற்றிப் பேசிப் பயனில்லை. ஆனால், இனியாவது கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொண்டு முன்னோக்கி நகர்வது எவ்வாறு - என்பதை கற்றுக்கொள்வது மட்டுமே தமிழர்களுக்கு முன்னால் எஞ்சியிருக்கும் வரலாற்று பணியாகும்.

இன்றைய சூழலில் தமிழர்கள் ஒரு தேவையான மக்கள் கூட்டம் என்பதை நிரூபித்தால் மட்டுமே, ஈழத் தமிழர்கள் மீது வெளித் தரப்புக்களின் கடைக்கண் பார்வை படும். அதனை எவ்வாறு ஏற்படுத்துவது? வெறுமனே அறிக்கைகளும் 'யூரியூப்' ஆவேசங்களை மட்டுமே செய்து கொண்டிருந்தால், தமிழர்கள் முன்னோக்கி நகர முடியுமா - அதற்கான வாய்ப்பு தமிழர் படலையை தட்டுமா? நிச்சயமாக இல்லை. இந்த நிலையில்தான் நமக்கான ஒரு வரலாற்று வாய்ப்பாக ஜனாதிபதி தேர்தல் கிடைத்திருக்கின்றது. அது வழமையான தேர்தல் போல் சாதாரணமானதாக இருந்திருந்தால், இது நிச்சயம் ஒரு வாய்ப்பாக இருந்திருக்கப் போவதில்லை - ஆனால், இது ஒரு நெருக்கடியான தேர்தல். தென்னிலங்கை நெருக்கடியில் இருக்கின்ற போதுதான், ஈழத் தமிழர் ஒப்பீட்டடிப்படையில் வாய்ப்புக்களை பெறுகின்றனர்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒருநாள் சம்பளமாக 2000 ரூபா

## வழங்க கோருகிறார் இராஜாங்க அமைச்சர்

பத்தரமுல்ல, ஏப். 21

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளமாக குறைந்த பட்சம் 2000 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்பதே எனது நிலைப் பாடாகும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்த குமார் தெரிவித்தார்.

பத்தரமுல்ல இசுருபாயவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறுகையில்

தற்போதைய சூழ்நிலைக்கமைய பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா அல்லது இரண்டாயிரம் ரூபாய் வழங்கினால் கூட அது போதாது. எனவே, குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும்.

200 ரூபாய் சம்பள அதிகரிப்புக்கே கம்பனிகள் தயாராகவுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. இதற்கு இணக்கம் தெரிவிக்க முடியாது. குறைந்தபட்சம் ஆயிரத்து 700 ரூபாயாவது அவசியம் வழங்கப்பட வேண்டும். இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் செல்ல வேண்டும் .

பெருந்தோட்டங்களைப் பொறுப்பேற்றது முதலே நஷ்டம் என்ற புராணத்தை கம்பனிகள் பாடி வருகின்றன. இலாபம் இல்லையேல் தோட்டங்களை அரசிடம் கையளிக்கலாம். ஆனால், முதலாளிகள் அவ்வாறு கையளிப்பதில்லை. காரணம் கம்பனிகள் நஷ்டத்தில் இயங்கவில்லை.- என்றார் அரவிந்தகுமார். (எ)

# சகோதரி முறைப்பாடு இளைஞன் கைதானார்

மஸ்கெலியா, ஏப். 21

சகோதரியை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற சந்தேகத்தின் பேரில் மஸ்கெலியா பொலிஸாரால் 23 வயது இளைஞன் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபரை நேற்று முன்தினம் ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கடந்த வியாழக்கிழமை மாலை சகோதரி மூலம் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்தே குறித்த நபரை மஸ்கெலியா குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்திய பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். (எ)

# லொறியில் சிக்கிய கைப்பை பெண்ணின் உயிரை பறித்தது

நிட்டம்புவ, ஏப். 21

நிட்டம்புவ, வத்துபிட்டிவல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணின் கைப்பை லொறியில் சிக்கியதால் லொறியில் மோதி அப் பெண் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியில் கைப்பை சிக்கியதில் மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்த பெண் அதே லொறியால் மோதப்பட்டே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இவ்வாறு உயிரிழந்த பெண் 54 வயதுடையவர் என பொலிஸார் கூறினர்.

இதேவேளை, லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# நண்பர்கள் இடையே வாக்குவாதம் ஒருவர் கொலை! ஒருவர் கைது

வாழைச்சேனை, ஏப். 21

மட்டக்களப்பு - வாழைச்சேனை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

கையடக்கத் தொலைபேசி தொடர்பில் நண்பர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் நீண்டதில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

உயிரிழந்தவர் 43 வயதுடைய பிறைந்துரைச்சேனை பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# விபத்தில் சிக்கிய மாணவன் மரணம்

மெல்சிறிபுர , ஏப். 21

குருநாகல் ரம்பே - மெல்சிறிபுர வீதியில் பன்சியகம பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவன் உயிரிழந்தார்.


மூவர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை யிழந்து வீதியை விட்டு விலகி மின் கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவரும் பின்னால் அமர்ந்திருந்து பயணித்தவரும் படுகாயமடைந்ததுடன், பொல்பித்திகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்நிலையில், மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற மாணவன் உயிரிழந்தார்.

கலடன்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

காயமடைந்த மற்றைய நபர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# “இது எங்கட துறை”

யோ.ஜோவர்ணன்
(ஊடகக்கற்கைகள் துறை, யாழ் பல்கலைக்கழகம்)



“என்ர கையை இழந்த, இந்த மண்ண விட்டு நான் போகவே மாட்டேன்…, எங்கட துறையில மட்டுந்தான் நாங்கள் தொழில் செய்வம்…” வரலாற்று ரீதியாகவும் காலங் காலமாகவும் அதிகாரம் கொண்டவர்கள், அதிகாரமற்ற, குரலற்ற, ஒடுக்கப்பட்ட மக்களை மௌனிக்க வைப்பது புதிய விடயமயல்ல என்பது அறிந்ததொன்றே. இலங்கையிலும் பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனமான தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலப்பரப்பை ஆக்கிரமிப்பது, அதிகமாக இடம்பெறுகின்ற ஒரு துயர விடையமாக இருக்கையில். தமிழர் வாழும் நிலப்பரப்பை தமிழர் ஒருவரே ஆக்கிரமிக்க முனைவது என்பது அதிர்ச்சியூட்டும் புதியதொரு விடயமாகவேயுள்ளது.

ஈழ மண்ணின் வடபுலத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில் நிலப்பரப்பளவில் முதலிடத்தில் வகிப்பதும், இறுதி யுத்தத்தின் போது பெரும் உயிரிழப்புக்களையும் சொத்தழிவுகளையும் சந்தித்த மாவட்டமே முல்லைத்



தீவாகும். இங்கு சூரியன் உதயமாகின்ற கிழக்குக் கடற்கரைப் பகுதி, இயற்கையின் கொடையாகிய கடலன்னையை, 70 கிலோமீற்றர் நீளம், தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது.

இம்மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஒன்றே, தியோகு நகராகும். கரைதுறைப்பற்று பிரதேச



செயலாளர் பிரிவுக்குட்பட்ட இக்கிராமதில் கடந்த 1983 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது ‘தியோகுப் பிள்ளை’ எனும் கிறிஸ்தவ பாதிரியாரால் மக்கள் குடியமர்த்தப்பட்டமையினால் தியோகு நகர் என பெயர் சூட்டப்பட்டதென்பதே இக்கிராம மக்களின் கருத்தாகும். நீண்டகால யுத்தத்தினாலும் சுனாமிப் பேரலையினாலும் தாக்கப்பட்டு பல உயிர்களை பலி கொடுத்த இக்கிராமத்தில் வறுமையின் மத்தியில் தற்பொழுது 150 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 25 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலையே பிரதான ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

41 ஆண்டுகள் அதாவது நான்கு தசாப்தங்கள் கடற்றொழிலை நம்பியே வாழும் மீனவ சமூகம், கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து நிம்மதியற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பதாக இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அதாவது கனடாவில் வசிக்கும் புலம்பெயர் தமிழர் ஒருவர், இக்கிராம மீனவர்கள் தொழில் செய்யும் இறங்கு துறைக்கு அருகில் தனியார் கம்பனி ஒன்றுக்காக, குறித்தளவு நிலப்பகுதியை விலைக்கு பெற்றுக் கொண்டு, சுற்றுலாத்தளத்தை (பல கட்டடங்கள்) அமைத்து வருகின்றார். அதுமட்டுமின்றி கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மீனவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் அல்லற்படுவதையும் இனங்கான முடிகின்றது.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்துவிட்டு, தொண்டு நிறுவனம் ஒன்றில் தொழில் புரிபவரும் கடற்றொழிலை பகுதி நேரமாக மேற்கொள்ளும் கிரா மத்து மீனவரான கிருசாந், “எங்கட துறைக்கு பக்கத்தில சுற்றுலா விடுதிகளை அமைக்கிற தனியார் கம்பெனி, எங்கட இறங்குதுறையில, நாங்கள் வெயில் நேரத்துல நிழலுக்க இருந்து வல தட்றத்துக்கும், தொழில் முடிய வலை, கயிற நிழலுக்க, வைச்சிட்டு வீட்ட போகிறத்துக் கும், ஒரு வாடிக்கொட்டில் போட்டா அதையும் புடுங்கி எறியிறாங்கள்” என குமுறுகின்றார்.



நேரமோ மூன்று மணி, சூரியன் சற்று சரிவாகத்தான் வானத்தில் உள்ளது. எனினும் வெயிலின் சூடு சற்றும் குறையவில்லை. கடற்கரையில் ஓர் ஆண் மற்றும் ஒரு பெண் என இருவர் மாத்திரமே, வலையை இழுத்து படகினுள் போடுகின்றனர். அவ்வேளை, ஒரு கண்ணின் பார்வை இழந்த, மிகவும் மெலிந்த தோற்றம் கொண்ட அங்குள்ள அக்கிராமத்து மீனவரின் மனைவி, “மண்ணெண்ணையை சிலவழிச்சு, இரவிரவா கஷ்டப்பட்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 21.04.2024 - 27.04.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 08
நல்ல நேரம்: 09.01 - 10.31
ராகு காலம் : 04.35 - 06.01
திதி: திரயோதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் குழந்தைகளின் சீரான முன்னேற்றம் மனதில் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்கு, அவர்களின் திறமைக்கேற்ப நல்ல பணி கிடைக்கும். புதிய பதவிகள் கிடைத்து, அதற்கேற்ப அந்தஸ்தும் உயரும். தொழில் புரிபவர்களுக்கு அரசு மற்றும் வங்கி மூலம் உதவிகள் கிடைத்து நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். எடுத்துக் கொண்ட புதிய திட்டங்களில் எதிர்பாராத தாமதங்கள் தடைகள் ஏற்படலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் சிலருக்கு வீண் அலைச்சல்கள் ஏற்படும். அரசுப் பணி புரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் சுப காரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வீர்கள். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். உங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். புத்திர பாக்கியம் ஏற்படும். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். உங்களுக்குத் திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி நோக்கிச் செல்லும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். உங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும்.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும் அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். அரசு ஊழியர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இராது. தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெண்களின் அறிவுத்திறன் கூடும்.

# தூண்டில் போடும் விக்கியரும் தூர ஓடும் தலைவர்களும்!



கந்தையா அருந்தவபாலன்

பதவிக் கதிரைக்கு நாட்டமில்லாமல் இருக்கும் ஒருவன்கூட ஒருமுறை அக்கதிரையில் அமர்ந்துவிட்டால் அதை விட்டு எழுவதற்கு மனமில்லாதவனாக மாறிவிடுகிறான். அதனால் எத்தகைய திருகு தாளங்கள் செய்தேனும் அக்கதிரையைத் தக்கவைப்பதற்கு அவன் முயல்வதை அன்றாடம் நாம் காணமுடியும். இது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ நிச்சயமாக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரவனுக்குக் கனகச்சிதமாகப் பொருந்தும். வடக்கு மாகாணசபைக்கு முதலமைச்சராக அரியணை ஏற்றப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை அவரது அரசியல் செயல்பாடுகளை நோக்கும் சாதாரண குடிமகன் ஒருவன்கூட இதனை மறுக்க மாட்டான். கட்சியுடன் முரண்பட்ட போதும் முதலமைச்சர் பதவியைக் கடைசிவரை கைவிடாதிருந்தமை, இடைப்பட்ட காலத்தில் தமிழ் மக்கள் பேரவையின் தலைமைப்பதவி, நாடாளுமன்றப் பதவிக்காகப் பேரவையைப் பயன்படுத்தி கட்சி உருவாக்கம், தனது வெற்றியை உறுதிப்படுத்தக் கட்சிகளின் கூட்டு, என்ற உத்திகளைக் கையாண்டு இதுவரை பதவிகளில் சுகம் கண்ட நீதியரசரின் தற்போதயை பதவிக் காலம் கடைசிக் கந்தாயமாகிவிட்டதால் அடுத்த பதவிக்காகப் பகீரதப் பிரயத்தனங்களில் இறங்கிவிட்டார் என்பதை அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. அத்தகைய வெளிப்பாடுகளில் ஒன்றுதான் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பான அவரது அண்மைக்காலக் கருத்துகளும் நடவடிக்கைகளும். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவை தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை அடைவதற்காக எவ்வாறு கையாள்வது என ஏனைய சமூக, அரசியல் தலைவர்கள் சிந்தித்து செயற்பட்டுக் கொண்டிருக்கையில் அதனைத் தனது எதிர்காலப் பதவிக்கான ஒரு துருப்புச் சீட்டாக எவ்வாறு மாற்றுவது என்று நீதியரசர் சிந்தித்து செயற்படுகின்றார் போலத் தெரிகிறது. அதனால் அவரது நோக்கத்தை நன்கு விளங்கிக்கொண்டவர்கள், ஏலவே அவர் தொடர்பாகக் கசப்பான பட்டறிவைப் பெற்றவர்கள் அவர் போடும் தூண்டிலில் அகப்படாமல் விலகி ஓடுவதில் ஆச்சரியமேதுமில்லை.

நீண்ட இழுபறிகளின்பின் நடந்த தேர்தல் மூலம் கிடைத்த வடக்கு மாகாணசபையை வினைத்திறனாக நடத்த விக்னேஸ்வரனுக்கும் இயலுமை இருக்கவில்லல. அவரைக் கதிரையில் அமர்த்தியவர்களும் அதற்கு இடந்தரவில்லை. அரியணை ஏற்றியவர்களுடன் முரண்பட்டு, “வீட்டுக்கு வெளியே வந்து வாக்களியுங்கள்” என்று அறைகூவல் விடுத்த போதும், முதலமைச்சர் பதவியைத் தூக்கியெறிய அவருக்கு மனம் வரவில்லை. மாகாணசபையின் இறுதிநாள் வரை அக்கதிரையில் இருந்துவிட்டு பின்னர் தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் பதவியில் ஒட்டிக் கொண்டார். காலத்தின் தேவை கருதி சமூகத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் துறைசார் அறிஞர்களையும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட தமிழ்மக்கள் பேரவையையும் சரியான முறையில் நெறிப்படுத்திக் கட்டிவளர்க்கத் தவறியது மட்டுமன்றி அதன் முடிவுக்கும் அவரே காரணமானார். தமிழ் மக்கள் பேரவையைத் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் போவதில்லை என்று சத்தியம் செய்த நீதியரசர் அப்பேரவைக் கூட்டத்திலேயே அவரது அரசியல் கட்சியைப் பிரகடனப்படுத்தினார். நீதிமன்றக் கூண்டில் நிற்கும் ஒருவனிடம் “சொல்வதெல்லாம் உண்மை” என்ற சத்தியத்தை எதிர்பார்த்த ஒரு நீதிபதியின் சத்தியம் ஒரு பொய்ச்சத்தியமானது. தமிழ் மக்களின் பேரியக்கமாக தமிழ் மக்கள் பேரவையை வளர்ப்பதற்குப் பதிலாகத் தனது அரசியல் கட்சியொன்றுக்கான ஆதரவுத் தளத்தை உருவாக்குவதற்காகவே விக்னேஸ்வரன் அதனைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பியிருந்தார் என்பது கசப்பான உண்மை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முரண்பட்டதால் அக்கட்சியில் தனக்கு வாய்ப்புக் கிடைக்காது. தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் பதவி அதிகாரமற்றதும் மக்கள் பணிக்கானதும் ஆகையால் அது தனக்குத் தேவையற்றது. நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு கட்சி அவசியம். அதுவும் முழுமையாகத் தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற தேவைகளுக்காக அவரால் உருவாக்கப்பட்டதே தமிழ் மக்கள் கூட்டணி. பொதுத் தேர்தல் நெருங்கி வந்தமையால் சின்னமொன்று தேவை என்பதற்கு அப்பால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை உறுதிப்படுத்துவதற்கு கட்சிகளின் கூட்டும் அவருக்கு அவசியப்பட்டதால் வேறு சில கட்சிகளையும் தலைவர்களையும் இணைத்துக் கொண்டார். அவரது நோக்கம் நிறைவேறியது. ஆனால் அந் நோக்கம் நிறைவேற உழைத்தவர்கள் எவரும் இன்று அவருடன் இல்லை. கட்சி வேட்பாளர்கள், கூட்டணித் தலைவர்கள், மக்கள் ஆதரவு பெற்ற கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் எவருமே இன்று அவருடன் இல்லை. உண்மையில் இன்றுள்ள தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சி, தேர்தல் ஆணைக்குழுவின் நியதிகளுக்கும் கட்சியின் யாப்பு விதிகளுக்கும் அமையச் செயற்படாமல் இருப்பதால் கட்சியினதும் செயலாளர் உட்பட அதன் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களதும் சட்டவலு கேள்விக்குட்படுத்தக் கூடியதொன்றாகவே உள்ளது. முதலமைச்சர் பதவி தொடக்கம் நாடாளுமன்றப் பதவி வரை ஏற்றிவிட்ட ஏணிகளை அவர் உதைத்துத் தள்ளிவிட்டதால் இன்று தனிமைப்படுத்தப்படுகிறார் என்பதை அவர் அண்மையில் கூட்டிய சந்திப்புக்கு எந்தவொரு அரசியல் தலைவரும் சமுகமளிக்கவில்லை என்பது நல்ல சான்று.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தானே அதிகாரமிக்க பதவிகளில் இருக்க விரும்பும் ஒருவன் ஏனையவர்களுடன் இணைந்து செயற்படுத்துவதற்கான வாய்ப்பைப் இழப்பதுடன் அவன் தனிமைப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கும். இதுவே விக்னேஸ்வரனுக்கும் நிகழ்ந்து வருகிறது. பல கட்சிகள் அல்லது தலைவர்கள் இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் உருவாக்க விரும்பிய கூட்டணிக்கு இறுதிவரை ஆதரவு தெரிவித்து பங்குபற்றிவிட்டு இறுதியில் தனக்கு அக்கட்சியின் செயலாளர் பதவியைக் கேட்டு அடம்பிடுத்து வெளியேறிய விக்னேஸ்வரன்மீது அக்கட்சித் தலைவர்கள் எவ்வளவுதூரம் நம்பிக்கை வைத்துச் செயற்படமுடியும்? தனது கட்சியின் செயலாளராகத் தானே இருக்க வேண்டும் அதேவேளை கட்சியில் தனக்கு மேலே ஒருவர் தலைவராக இருக்கக் கூடாது என்பதற்காகவே தலைவர் பதவியற்ற கட்சி யாப்பை உருவாக்கிய ஒருவர் அதிகாரம் மிக்க பதவியில்லாது எந்தக் கூட்டமைப்பிலும் இருக்க விரும்புவாரா?

அதுமட்டுமன்றி பொதுவான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காகக் கூடிப் பேசிக் கொண்டிருக்கும் போதே தன்னிச்சையாக ஒரு முடிவைத்தெரிவிப்பது, முன்னுக்குப் பின், முரணாக ஊடகங்களுக்குக் கருத்துரைப்பது, பொது முடிவைப் பின்பற்றாது எதிராகச் செயற்படுவது போன்றவை எல்லாம் விக்னேஸ்வரனின் இயல்பான குணங்களாக இருக்கையில் அவர் தொடர்பாக எச்சரிக்கையுடன் மற்றவர்கள் இருப்பதும் இயல்பானதே. சென்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் அழைப்பின் பேரில் அவரது கட்சி உட்பட தமிழ்க் கட்சிகளின் பல சுற்றுக் கலந்துரையாடல் நடந்து தீர்மானம் எடுப்பதற்கு முதல்நாளே அவர் தனது முடிவை பகிரங்கமாக ஊடகங்களுக்குத் தெரிவித்து விட்டார். இதனால் அவரது கட்சிப் பிரதிநிதிகளுக்கு மட்டுமன்றி கூட்டணித் தலைவர்களுக்கும் கலந்துரையாடல் கூட்டத்தில் தலைகுனிவை ஏற்படுத்தியிருந்தார். நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்புத் தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் முடிவுக்கு மாறாக ரணிலுக்கு வாக்களித்தார். இதுபோல பல வாக்கெடுப்புகளில் தமிழ் உறுப்பினர்களின் முடிவுக்கு மாறாக மட்டுமன்றி தமிழ் மக்களின் விருப்பங்களுக்கும் மாறாகவே நடந்து கொண்டுள்ளார். தனது தீர்மானமும் தமிழ்த்தரப்பின் தீர்மானமும் ஒன்றானால் கூட்டு, ஒற்றுமை அவசியமென்று முழங்குவார். தீர்மானம் மாறியிருப்பின் இரகசியமாகத் தன்னிச்சையாகச் செயற்படுவார். அரசியல் தீர்மானங்களையும் நீதிமன்றத்தில் நீதிபதி ஒருவரின் தீர்ப்பாகவே விக்னேஸ்வரன் கருதுகிறார் போலும். அதாவது சரி பிழை என்பதற்கு அப்பால் தனது முடிவே இறுதியும் அறுதியுமான முடிவாக மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதுவது அவர் இயல்பு.

அரசியல் முன்மொழிவு ஒன்று தொடர்பாக நேர், மறைக் கருத்துக்களும் விமர்சனங்களும் எழுவது இயல்பு மட்டுமல்ல ஆரோக்கியமான தீரமானத்துக்கு அது அவசியமானதுங்கூட. இது தமிழ்ப் பொது வேட்பாளர் முன்மொழிவுக்கும் பொருந்தும். இது பொருத்தமற்ற தீர்மானமென அண்மையில் சம்பந்தன் அவர்கள் தெரிவித்ததான செய்தியொன்று வெளிவந்தது எல்லோரும் அறிவர். அது பொருத்தமானதா இல்லையா என்பது ஒருபுறமிருக்க சம்பந்தன் கூறியதான கருத்துக்கு எதிராக விக்னேஸ்வரன், சம்பந்தன் அரசினால் வழங்கப்பட்ட மாளிகையில் இன்றுவரை இருந்து வருவதால் சம்பந்தன் ஆட்சியாளர்களுக்குச் சார்பாகவே கருத்துக் கூறுவார் என்ற சாரப்பட ஊடகங்களுக்குக் கூறியிருந்தார். தமிழ் மக்களின் அரசியல் தொடர்பாக சம்பந்தன் மீது ஆயிரம் விமர்சனங்கள் இருப்பினும் இவ்வாறு சம்பந்தன் மீது பழி சுமத்த தனக்கு அருகதை உள்ளதா என்று விக்னேஸ்வரன் ஒரு கணம் சிந்தித்திருக்க வேண்டும். முதலமைச்சர் பதவி போன பின்னர் கோவில் வீதியில் விக்னேஸ்வரன் வசித்துவரும் வீட்டுக்கான வாடகை உட்பட கட்சியின் செலவுகள், சமூகநலன் செலவுகள், அவரது தேர்தல் செலவுகள் எல்லாமே புலப்பெயர்ந்த சிலரின் கொடையாக உள்ளன. பயன்படுத்தும் வாகனங்கூட அவருக்குச் சொந்தமானது அல்ல. அவ்வாறாயின் கொடை வழங்கிவரும் புலம் பெயர்ந்த ஒருசிலரின் விருப்பத்தின் படியே விக்னேஸ்வரன் அரசியல் செய்கிறார் என்று அவரைப் பார்த்துச் சம்பந்தன் திருப்பிக் கூறமுடியமல்லவா? ஆனால் வளர்த்த கடா பலமுறை சம்பந்தன் மார்பில் பாய்ந்த போதும் அமைதியாக இருந்தது சம்பந்தன் அரசியல் முதிரச்சியைக் காட்டுகிறது.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தவது என்பது சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் இணைந்து முன்கொண்டு செல்ல வேண்டிய ஒன்று. சமூகத்தின் அடிமட்டம்வரை அதுபற்றிய விழிப்புணர்வு அவசியமாகும். அதன் பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பான ஆழமான பார்வை அவசியம். அதேவேளை மாற்றுக் கருத்துடையோரையும் தெளிவுபடுத்தி இணைக்க வேண்டும். சமூகத்தில் அம்முன்மொழிவு பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். அந்நடவடிக்கைகள்கூட சமூகத்தின் பல்வேறு தரப்பு பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம். அதைவிடுத்து ‘கேட்டால் பொது வேட்பாளராக நான் வருவேன்’ என்றோ அல்லது ‘அவர்தான் பொருத்தமானவர் இவர்தான் பொருத்தமானவர் ’என்று எழுந்தமானமாக அறிக்கை விடுவதோ அல்லது பொது வேட்பாளருக்கான தகுதிவிதிகளைத் தனியொருவர் தீர்மானிப்பதோ அம்முன்மொழிவின் நோக்கத்தை அடைய எவ்விதத்திலும் உதவப் போவதில்லை. பதிலாகச் சிக்கல்களையே மேலும் மேலும் தோற்றுவிக்கும். எத்தகைய அரசியல், சமூகக்கள அனுபவங்களையும் கொண்டிராத, அதற்கு சற்றேனும் விரும்பமில்லாத தனிநபர்கள் சமூகப் பிரதிநிதிகளுடன் எத்தகைய ஊடாட்டத்திலும் ஈடுபடாது தங்கள் பணிமனையிலிருந்து தமக்கு விருப்பமானவர்களுக்கு அழைப்பு விடுப்பதும், நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முன்மொழிவின் உண்மையான நோக்கத்தை அடைவதற்கானது எனக் கொள்ள முடியாது. அவை அவர்களின் தனிப்பட்ட நலன்சார் நிகழ்ச்சி நிரலாகவே கொள்ளப்பட வேண்டும். இதனை அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி சமூகத்தலைவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.



# முன்னாள் ஜனாதிபதிகளின் அரசியல்



## வீரகத்தி தனபாலசிங்கம்

முன்னாள் ஜனாதிபதிகள் அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்க வேண்டும் என்று கூறுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமா இவ்வளவு காலமும் ஏன் காத்திருந்தார் என்று விளங்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் தங்களது உடலாரோக்கியத்துக்காகவும் நாட்டு மக்களின் நலனுக்காகவும் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்க வேண்டும் என்றும் அவர்களுக்காக செலவிடப்படுகின்ற அரசாங்க நிதி எந்தவொரு அரசியல் நடவடிக்கைக்காகவும் பயன்படுத்தக்கூடாது என்றும் அழகப்பெருமா சில தினங்களுக்கு கூறினார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் குயின்ஸி அடம்ஸ் மாத்திரமே ஒரு தடவை அமெரிக்க காங்கிரஸ் தேர்தலில் போட்டியிட்டார் என்றும் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட்ட ஒரேயொரு வெளிநாட்டு அரச தலைவர் அவரே என்றும் அழகப்பெரும உதாரணத்தையும் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் உடலாரோக்கியத்தில் அழகப்பெருமவுக்கு இருக்கக்கூடிய அக்கறை ஒருபுறமிருக்க, அவர்கள் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவதில் உள்ள பயனற்றதன்மையை இப்போதாவது அவரால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருப்பது நல்ல விடயமே.

நாட்டின் அதியுயர் பதவியை வகித்து பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் அரசியலைக் கைவிட மனமில்லாதவர்களாகவும் அதிகாரத்தில் இருந்து மக்களால் விரட்டியடிக்கப்பட்ட பின்னரும் கூட மீண்டும் பதவிக்கு வருவதற்கு துடிப்பவர்களாகவும் எம்மத்தியில் இன்று வாழ்கின்ற முன்னாள் ஜனாதிபதிகளைக் காண்கிறோம்.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன தனது இரு பதவிக்காலங்கள் நிறைவடைந்த பிறகு அரசியலில் இருந்து முற்றுமுழுதாக ஓய்வுபெற்றார். இறக்கும்வரை அவர் மீண்டும் அரசியலுக்கு வருவதில் நாட்டம் காட்டவேயில்லை. ஓய்வில் இருந்த காலப்பகுதியில் அவர் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் பகிரங்கமாக கருத்தைக் கூறியதுமில்லை.இரண்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாச தனது முதலாவது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அவரின் எஞ்சிய ஒன்றரை வருட பதவிக் காலத்துக்கு அதிகாரத்தில் இருந்த டி.பி.விஜேதுங்க ஓய்வுபெற்ற பிறகு அரசியல் பக்கம் திரும்பிப்பார்க்கவே இல்லை. ஆனால், அவருக்கு பிறகு கடந்த மூன்று தசாப்த காலத்தில் ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் பதவிக்காலம் நிறைவடைந்த பின்னரும் தீவிர அரசியலில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களில் மகிந்த ராஜபக்சவும் மைத்திரிபால சிறிசேனவும் பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்றத்துக்கும் வந்திருக்கிறார்கள்.

திருமதி குமாரதுங்கவை பொறுத்தவரை, சுமார் இரு தசாப்தங்களுக்கு முன்னர் தனது இரு பதவிக்காலங்களின் முடிவில் ஓய்வுபெற்ற பிறகு அவரது அரசியல் ஈடுபாடு பெருமளவுக்கு ராஜபக்சாக்களுக்கு எதிரான அணிதிரட்டல்களுக்கு ஆதரவளிக்கும் நோக்குடனானதாகவே இருந்தது.

மகிந்தவுக்கு எதிராக இரு ஜனாதிபதி தேர்தல்களில் எதிரணியின் பொது வேட்பாளர்களைக் களமிறக்குவதில் திருமதி குமாரதுங்க முன்னின்று செயற்பட்டார். மற்றும்படி முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிடுவதுடனும் ஊடகங்களுக்கு நேர்காணல்களை வழங்குவதுடனும் தனது அரசியல் செயற்பாடுகளை அவர் மட்டுப்படுத்திக் கொண்டார். பாராளுமன்றத்துக்கு மீண்டும் வருவதற்கு அவர் முயற்சிக்கவில்லை.



ஆனால், அண்மைக்காலமாக திருமதி குமாரதுங்க கடந்த நூற்றாண்டில் பல தசாப்தங்கள் தங்களது குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு புத்துயிரளிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்.

படுமோசமாகப் பலவீனப்பட்டிருக்கும் சுதந்திர கட்சியை மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தில் இருந்து விடுவித்து மீண்டும் மக்கள் ஆதரவுடனான கட்சியாக மாற்றுவதற்கு திருமதி குமாரதுங்க முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் பெரும் பயனைத் தரும் என்று எதிர்பார்க்கமுடியாது. கட்சி மேலும் பிளவுபடக்கூடிய ஆபத்தே இருக்கிறது.



மகிந்த ராஜபக்ச 2005 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வந்தபிறகு சுதந்திர கட்சியை பண்டாரநாயக்க குடும்பத்துக்கு சொந்தமான கட்சி என்ற நிலையில் இருந்து ராஜபக்ச குடும்பத்தின் ஆதிக்கத்தின் கீழான கட்சியாக மாற்றினார். 2015 ஜனாதிபதி தேர்தலில் மகிந்த தோல்வியடைந்ததை தொடர்ந்து சுதந்திர கட்சியின் தலைமைத்துவத்தை தங்கள் வசம் வைத்திருக்க ராஜபக்சாக்களினால் முடியாமற்போய்விட்டது. பிறகு அவர்கள் தங்களுக்கென்று தனியாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவை தொடங்கி மக்களின் அமோக ஆதரவுடன் மீண்டும் ஆட்சியையும் கைப்பற்றினார்கள்.

இலங்கையில் முன்னென்றும் இல்லாத வகையிலான படுமோசமான தவறான அரசியல் மற்றும் ஆட்சிமுறைப் போக்குகளுக்கு வழிவகுத்தவரான மகிந்த நாட்டின் அதியுயர் பதவியை வகித்து விட்டு மீண்டும் சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக வருவதில் எந்தவிதமான அசௌகரியத்தையும் எதிர்நோக்கியதாக தெரியவில்லை.

2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் அன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றத்தில் கூட்டு எதிரணியின் தலைவராக இருந்த மகிந்த 2020 பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவின் தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று தனது இளைய சகோதரர் கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்தில் பிரதமராக நியமிக்கப்பட்டார். அதற்கு பிறகு நடந்தவை அண்மைக் கால வரலாறு.

இலங்கை வரலாற்றில் மக்கள் கிளர்ச்சியினால் பதவியில் இருந்து விரட்டப்பட்ட அபகீர்த்திக்குரிய அரசாங்கம் என்றால் அது ராஜபக்சாக்களின் அரசாங்கமேயாகும்.

முன்னரும் இலங்கை அரசியல் குறிப்பிட்ட சில உயர்வர்க்கக் குடும் பங்களின் ஆதிக்கத்தில் இருந்தது என்றபோதிலும், ராஜபக்ச குடும்பத் துக்கு எதிராகச் செய்ததைப் போன்று அந்த குடும்பங்களுக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கிக் கிளர்ச்சி செய்யவில்லை.

இத்தகைய வரலாற்று அவமதிப்புக்குள்ளான ஒரு குடும்பம் இன்னமும் கூட பின்னணியில் இருந்து அரசாங்கத்தை இயக்கக்கூடியதாக இருப்பதும் இலங்கையின் எதிர்கால அரசியல் திசை மார்க்கத்தை தங்களால் தீர்மானிக்கமுடியும் என்று அகங்காரத்துடன் நினைப்பதும் ஒரு பெரிய விசித்திரமாகும்.

மகிந்தவை பின்பற்றி முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவும் கடந்த பொதுத் தேர்தலில் ராஜபக்சாக்களின் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்றத்துக்கு வந்தார். அவ்வாறு கூட்டுச் சேராமல் போட்டியிட்டிருந்தால் தனது தலைமையில் சுதந்திர கட்சிக்கு இருக்கும் மக்கள் செல்வாக்கின் இலட்சணத்தை சிறிசேன தெரிந்து கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும்.

ஜனாதிபதியாக சிறிசேன நாட்டை ஆட்சிசெய்த இலட்சணத்தையும் அண்மைக்காலமாக பொறுப்பற்ற முறையில் கருத்துக்களைக் கூறி ஏற்படுத்திவருகின்ற (கோமாளித்தனமான) சர்ச்சைகளையும் நோக்கும்போது இத்தகைய ஒருவரை ஜனாதிபதியாக தெரிவுசெய்வதற்கு வாக்களித்த இலங்கை மக்களின் விவேகத்தை உலகம் உண்மையில் சந்தேகிக்கவேசெய்யும்.

கோட்டாபய பதவி விலகிய பின்னர் அவரை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதற்கு விசுவாசிகள் பல தடவைகள் முயற்சித்தனர். ஆனால், ராஜபக்ச சகோதரர்கள் தவறான ஆட்சி முறைக்கான முழுப்பழியையும் அவர் மீதே சுமத்தி தங்களை அவரிடமிருந்து தூர விலக்கிக் கொள்ளும் ஓர் உபாயத்தை கடைப்பிடிக்கிறார்கள். தனது அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் வெளிநாட்டுச்சதி இருந்ததாக குற்றஞ்சாட்டி கோட்டாபய எழுதிய புத்தகம் மீண்டும் அரசியலுக்கு வருவதற்கான ஒரு முன்னறிவிப்பு என்றும் சில அவதானிகள் கூறினார்கள்.

“வழமையாக பரந்தளவிலான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கிளர்ச்சியின் விளைவாக நாட்டின் தலைவர் ஒருவர் பதவி விலக நிர்ப்பந்திங்கப்படுகிறார் என்றால் ஒன்றில் அவர் தேர்தல்கள் இன்றி ஆட்சி செய்கின்ற ஒரு சர்வாதிகாரியாக இருக்க வேண்டும் அல்லது அவர் நாட்டு மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர் என்றால் தேர்தல் முறையைச் சூழ்ச்சித்தனமாகக் கையாண்டு நீண்டகாலமாக அதிகாரத்தில் இருக்கின்ற ஒருவராக இருக்கவேண்டும். ஆனால் நான் இந்த இரண்டு வகைகளில் எந்த ஒன்றுக்குள்ளும் வருபவன் அல்ல” என்பதே கோட்டாபயவின் நூலின் முன்னுரையின் முதல் வசனமாகும். எதற்காக ஜனாதிபதி பதவியை விட்டு ஓடவேண்டி வந்தது என்பதை புரிந்து கொள்வதில் அவருக்கு இன்னமும் கூட தடுமாற்றம் இருக்கிறது போலும்.

எது எவ்வாறிருந்தாலும், நாடு இரு தேசிய தேர்தல்களை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் அவர் மீண்டும் தீவிர அரசியலுக்கு வருவாரா இல்லையா என்பதை தெரிந்துகொள்வதற்கு நீண்ட காலம் காத்திருக்கத் தேவையில்லை.

எமது முன்னாள் ஜனாதிபதிகளின் அரசியல் பற்றி பேசும்போது நாம் முக்கியமான ஒரு விடயத்தை அவதானிக்கத் தவறக்கூடாது.

முன்னாள் ஜனாதிபதிகள் எல்லோரும் மக்களின் கோடிக்கணக்கிலான பணத்தில்தான் பராமரிக் கப்படுகிறார்கள். அவர்கள் ஓய்வூதியம், பாதுகாப்பு, தலைநகரில் ஆடம்பர வசதிகளுடன் கூடிய வாசஸ்தலம் என்று பல வரப்பிரசாதங்களை அனுபவிக்கிறார்கள். இவர்களில் எவருமே தங்களது சொந்தப் பணத்தில் வாழ முடியாதவர்கள் அல்லர். அத்துடன் தங்கள் குடும்பச் சொத்துக்களை நாட்டின் நன்மைக்காக தியாகம் செய்தவர்களும் அல்ல. மாறாக, அரசியலின் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெருமளவு சொத்துக்களை குவித்து வைத்திருக்கிறார்கள். அவற்றை மீட்டுக்கொண்டு வரவேண்டும் என்பது அண்மைக்காலமாக நாட்டு மக்களின் முக்கியமான கோரிக்கைகளில் ஒன்றாக இருக்கிறது.

இத்தகைய வசதிகளுடன் கூடிய ஆடம்பர வாழ்கையை அனுபவிக்கும் முன்னாள் ஜனாதிபதிகளில் மகிந்தவும் சிறிசேனவும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சிறப்புரிமைகளையும் அனுபவித்து வருகிறார்கள்.

ஜனாதிபதிகள் பதவிக்காலம் நிறைவடைந்து ஓய்வுபெற்ற பின்னர் மீண்டும் அரசியலுக்கு வராமல் இருந்தால் மாத்திரமே அவர்களுக்கு ஓய்வூதியமும் அரசாங்க செலவில் வசதிகளும் வழங்குவதற்கான ஏற்பாடுகளைக் கொண்ட திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டால் நாட்டு மக்கள் பெரிதும் வரவேற்பார்கள்.

புதிய அரசியல் கலாசாரத்தையும் முறைமை மாற்றத்தையும் கொண்டு வரப்போவதாகப் பேசுகின்ற எதிரணி அரசியல் தலைவர்கள் எதிர்வரும் தேசிய தேர்தல்களில் இது பற்றி மக்களுக்கு வாக்குறுதி ஒன்றை வழங்க முன்வருவார்களா? தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் இதை குறிப்பிடுவார்களா?

முன்னாள் ஜனாதிபதிகள் அரசியலில் ஈடுபடுவது அவர்களது அடிப்படை உரிமை என்ற வாதம் முன்வைக்கப்படலாம். ஆனால், அரசியலில் ஈடுபடுவதும் நாட்டின் அதியுயர் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு மீண்டும் மக்களால் தெரிவு செய்யப்படும் அரசியல் பதவி நிலைகளுக்கு வந்து மக்களின் பணத்தில் மேலதிக சிறப்புச் சலுகைகளை அனுபவிப்பதும் உண்மையில் வெவ்வேறு விடயங்கள்.



# ஒரு பொதுவேட்பாளர் கருத்தறிவுக்கு தலைவரில்லா ‘வீடு’க்குள்ளிருந்து சிதறலாக வரும் பல குரல்கள்!

பனங்காட்டான்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் 1960-70 காலப்பகுதியில் மேலதிக அரசாங்க அதிபராகவும் பொதுசன தொடர்பு அதிகாரியாகவும் கடமையாற்றியவர் திரு. ரி. முருகேசம்பிள்ளை. அப்போது கச்சேரி என அழைக்கப்பட்ட அரசாங்க செயலகத்தில் பணியாற்றுவதற்கு முன்னர் பளைப் பகுதியில் காரியாதிகாரியாக (டி.ஆர்.ஓ) பணியாற்றிய அரச நிர்வாக அனுபவஸ்தர் இவர்.

இந்தப் பத்தியாளர் அக்காலப் பகுதியில் ஊடகர் என்ற ரீதியில் திரு. முருகேசம்பிள்ளை அவர்களுடன் நெருக்கமாகப் பழகியவர். 1974 ஒக்டோபரில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை பல்கலைக்கழக வளாகமாக திறந்து வைக்க அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா விஜயம் செய்தார்.

இதனை எதிர்த்து தமிழர் ஐக்கிய முன்னணியினர் அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம் தலைமையில் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். தமிழர்கள் முதலில் எதனையும் எதிர்ப்பார்கள், பின்னர் தந்தது போதாது என்று மேலும் கேட்டுப் போராடுவார்கள் என்று அப்போது திரு. முருகேசம்பிள்ளை அவர்கள் சொன்னது இன்றும் நன்றாக ஞாபகத்தில் உள்ளது.

இவரது கூற்று உண்மையானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தை முழுமையான பல்கலைக்கழகமாக மாற்ற முதலில் கேட்கப்பட்டது. மருத்துவபீடம், விவசாயபீடம், சட்டபீடம் என்பவை பின்னர் கேட்டுப் பெறப்பட்டவை. இது வரலாறு.

அவ்வேளையில் திரு. முருகேசம்பிள்ளை அவர்கள் வேறு இரண்டு விடயங்களையும் முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தார். யாழ்ப்பாண நகரில் மத்திய கல்லூரிச் சந்தியில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப்பட்டபோது அதனை எதிர்த்து போராட்டம் நடத்தப்பட்டதாம். அவ்வழியாக நடந்து செல்பவர்கள், வாகனங்களில் செல்பவர்கள் மணிக்கூட்டை அண்ணாந்து பார்த்து செல்லும்போது விபத்துகள் இடம்பெறுமென்று இந்த எதிர்ப்புக்கு காரணம் கூறப்பட்டதாம். ஆனால் சில வருடங்களின் பின்னர் மேலும் பல சந்திகளில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்குமாறு அரசாங்கத்திடம் இவர்களே மனு கொடுத்தார்களாம்.

அவர் கூறிய இன்னொரு சம்பவம் யாழ்ப்பாணத்துக்கு ரயில் பாதை அமைக்கப்பட்டது தொடர்பானது. வயல்களை ஊடறுத்து ரயில் பாதை போடப்பட்டபோது அதற்கு எதிரான போராட்டம் பல மாதங்கள் நடைபெற்றது. ரயில் சத்தத்தினால் மாடுகள் நிலத்தை உழுவது தடைப்படுமெனவும், அதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படுமெனவும் அவர்கள் காரணம் கூறினராம். காலக்கிரமத்தில் யாழ்ப்பாணத்துக்கு ஒரு ரயில் சேவை போதாது என்று கூறி மேலதிக ரயில் சேவைகள் (யாழ்தேவி, உதயதேவி, மெயில் ரயில், எக்ஸ்பிரஸ் ரயில்) கேட்டு அதிகரிக்கப்பட்டதாக திரு. முருகேசம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்.

இந்த விடயங்களை இப்போது மீள் நினைவுக்கு உட்படுத்தி குறிப்பிடுவதற்கு ஒரு தேவை உண்டு. வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டுமென்ற கருத்தறி முயற்சியை கருவிலேயே சிதைப்பதற்கு வெளிவரும் எதிர்ப்புகளே.

பொதுவேட்பாளர் ஒருவரை தேர்தல் களத்தில் இறக்க வேண்டுமென்பது ஒரு கோரிக்கையாக மட்டுமே இப்போது உள்ளது. இதன் சாதக பாதகங்களை ஆய்ந்தோய்ந்து முடிவெடுப்பதற்காக இதனை முன்னெடுக்கும் சிவில் சமூகத்தினர் வடக்கிலும் கிழக்கிலும், தெற்கிலும்கூட பல்வேறு தரப்பினரை சந்தித்து விளக்கி வருவதுடன் மனுக்களையும் கையளித்து வருகின்றனர். இந்தக் கருத்தறி முயற்சியை எதிர்க்க வேண்டுமென்பதற்காகவே எதிர்ப்பவர்கள் சிலவேளை பின்னால் வரும் தேர்தல்களில் பொதுவேட்பாளர்களை தேடிப்பிடித்து நிறுத்த முன்வரக்கூடும். இதற்காகவே மணிக்கூடு கோபுரம் மற்றும் ரயில் சேவை ஆரம்ப நிகழ்வுகளை இங்கு குறிப்பிட நேர்ந்தது.

அநேகமாக யூலை மாதமளவிலேயே ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு அதிகாரபூர்வமாக வெளிவருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் அக்கதிரையில் ஏறவிடக்கூடாது என்ற இலக்கில் சஜித்தும் அனுரவும் தங்கள் பரப்புரைகளை ஆரம்பித்துவிட்டனர். முக்கியமாக வடக்குத் தமிழரின் வாக்குகளை இலக்கு வைத்து அம்புகளை வீசுகிறார்கள்.

நிலைமையை அவதானித்து பொதுவேட்பாளரை நிறுத்தலாமென்ற நிலைப்பாட்டில் சிவில் சமூகத்தினர் உள்ளனர். அதற்கிடையில் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பொத்துவில் முதல் பொலிகண்டிவரை புகழ் வேலன் சுவாமிகள் போட்டியிடுவார்களா என்ற பட்டிமன்றம் ஆரம்பமாகிவிட்டது. போகிற போக்கைப் பார்த்தால் நல்லை ஆதீன முதல்வர், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய தலைவர் ஆறுதிருமுருகன் ஆகியோரின் பெயர்களையும் சிலர் சந்திக்கு இழுக்கலாம்.

பௌத்த பிக்குகள் சிங்களக் கட்சிகளை உருவாக்கி அதன் தலைவர்களாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் வரலாமென்றால் தமிழர் தரப்பிலிருந்து ஆன்மிகவாதிகள் ஏன் வரக்கூடாதென்ற கேள்வி சிலரிடம் உள்ளது. முப்பத்தியைந்து வயதைத் தாண்டிய பல்கலைக்கழகச் சமூகத்தை சார்ந்த ஒருவரை பொதுவேட்பாளராக நிறுத்தக்கூடாதா என்ற கேள்வியும் சிலரிடம் உண்டு. இவைகளுக்கான பதில் அடுத்த ஓரிரு மாதங்களில் கிடைத்துவிடலாம்.

அதற்கு முன்னர், பொதுவேட்பாளர் தொடர்பாக இதுவரை வெளிவந்த கருத்துகள் - முக்கியமாக தமிழ் அரசியல் கட்சிகளின் தரப்பிலிருந்து வெளிவந்தவை பெரும்பாலானவர்களின் கவனத்தைப் பெற்றுள்ளன.

தமிழரசுக் கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு தோல்வி கண்ட பின்னர் கட்சியின் செயலாளர் பதவியில் கண்வைத்து சரிப்பட்டு வராது போன சுமந்திரன் சொல்கிறார் - தமிழ் வேட்பாளர் போட்டியிட்டால் சிங்களவர் தரப்பில் அது இனவாதத்தைத் தூண்டுமென்று. சிங்களவரிடம் இனவாதமே இல்லையென்பதுபோல இந்தக் கூற்று அமைகிறது. இருப்பினும், சிங்களவர் இனவாதத்தை தூண்டுவார்கள் என்று கூறுவது அவர்களை இந்நிலை நோக்கி உசுப்பி விடுவதாக இருக்கிறது என்பது விடயம் அறிந்தவர்களின் கருத்து.

தமிழரசுக் கட்சித் தலைவர் தேர்தலில் சுமந்திரனை தோற்கடித்து தலைவராக வெற்றி பெற்றும் அப்பதவியை அனுபவிக்க முடியாத நிலையிலுள்ள சிவஞானம் சிறீதரன், பொதுவேட்பாளர் போட்டியிடுவதை கொள்கையளவில் தாம் இணங்குவதாக அறிவித்துள்ளார்.

புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் நிலையில், இதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

தமிழரசின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதனின் கருத்து, பொதுவேட்பாளர் விடயத்தில் தமிழ் மக்களுக்கு ஆர்வமில்லை என்பது (இதனை எந்தப் பூதக்கண்ணாடியால் அவர் கண்டுபிடித்தார் என்பது தெரியவில்லை).

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரான இரா.சம்பந்தன் பொதுவேட்பாளர் விடயத்தை ஏற்க முடியாது என்று கூறியதாக ஊடகச் செய்திகள் தெரிவித்துள்ளன. சம்பந்தன் அரச பங்களாவில் அரச தயவில் தங்கியிருப்பதால் பொதுவேட்பாளரை எதிர்க்கிறாரென்று சுடச்சுட பதிலளித்துள்ளார் முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் எம்.பியுமான சி.வி. விக்னேஸ்வரன்.

பொதுவேட்பாளர் விடயம் தமிழர் தரப்பில் பிரதேசவாதத்தை ஏற்படுத்தும் என்பதோடு வேறு பல காரணங்களையும் கூறியுள்ளார் தமிழரசின் மூத்த துணைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம். கட்சித் தலைவர் போட்டியில் சுமந்திரனை ஆதரிக்கப்போய் தோல்வி கண்ட பின்னர் இனிமேல் எவரையும் ஆதரிக்கப் போவதில்லையென்று கூறும் இவர், ஆரம்பத்திலேயே நடுநிலைமை வகித்திருந்தால் நெருக்கடியான இவ்வேளையில் சிலவேளை கட்சியின் இடைக்காலத் தலைவராகியிருக்கலாம். யார் கண்டது?

எமக்கொரு பொதுவேட்பாளர் வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியுள்ளார் தமிழரசின் செயலாளர் பதவிக்கு முன்மொழியப் பெற்ற மட்டக்களப்பு தமிழரசின் மூத்த தலைவரும் முன்னாள் எம்.பியுமான சிறீநேசன். (சி.வி.கே. சிவஞானம் அவர்கள் கூறிய பிரதேசவாதம் அடிபட்டுப் போயிற்று).

இறுதியாக, தமிழர் தமிழருக்கு வாக்களிப்பது இனவாதமா என்று (சுமந்திரனைப் பார்த்து) கேள்வி எழுப்பியுள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

தமிழ் பொதுவேட்பாளர் போட்டியிடுகிறாரோ இல்லையோ இவ்விவகாரம் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதைபோன்று அல்லது குரங்கு வால் போன்று இழுபடப் போவது நிச்சயம்.

இவ்விடயத்தில் சுமந்திரன் தெரிவித்திருந்த ஒரு கருத்து அவரது அரசியல் அறிவை உள்நோக்கிப் பார்க்க வைக்கிறது. 1982ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலம் போட்டியிட்டார். 2010, 2019 ஜனாதிபதித் தேர்தல்களில் எம்.கே.சிவாஜிலிங்கம் போட்டியிட்டார். இவர்கள் இருவரும் பொதுவேட்பாளராகப் போட்டியிட்டு என்ன நடந்தது என்றவாறு சுமந்திரனின் கேள்வி அமைந்திருந்தது.

குமார் பொன்னம்பலம் தமது தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டார். எம்.கே.சிவாஜிலிங்கம் தாம் சார்ந்த ரெலோவில் போட்டியிடாது சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்டார். இலங்கையின் அதிகார தேர்தல் வெளியீட்டைப் பார்க்கின் இது தெரியவரும்.

தமிழரசுக் கட்சி முழுமையாக குமார் பொன்னம்பலத்தை எதிர்த்தபோதிலும் 1982 ஜனாதிபதித் தேர்தலில் இவர் வடக்குக் கிழக்கில் 1,64,000க்கும் அதிகமான வாக்குகளை தமிழ் காங்கிரஸ் சார்பில் பெற்றிருந்தார் என்பதை அப்போது பதினெட்டு வயது மாணவனாக இருந்த சுமந்திரன் அறியாதிருந்திருக்கிறார் போலும். சிவாஜிலிங்கம் இரண்டு தேர்தல்களிலும் முழு இலங்கையில் முறையே 9,000, 12,000க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இந்தப் பின்னணியில் வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து ஒருவர் போட்டியிடுவதை ஒரு ‘வீடு’க்குள் இருப்பவர்கள் வெவ்வேறு கோணத்தில் பார்த்து கருத்துக் கூறுவது ஏனென்று புரியவில்லை. அண்மையில் இடம்பெற்ற கட்சியின் தேர்தலில் உள்ஷ வீடு;க்குள்ளேயே போட்டியிட்டு, அதற்கு ஜனநாயகம் என்று மை பூசி பிளவுபட்டு நிற்பவர்கள், அது போதாதென்று ஜனாதிபதித் தேர்தலிலும் தங்கள் வாய்வரிசையை காட்ட முனைவது தெரிகிறது.

தேர்தலின் பெறுபேறு தோல்வி என்பதைத் தெரிந்து கொண்டே அதில் போட்டியிடுவது தமிழரின் அடிப்படை உரிமையை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டவே. இதையாவது அவர்கள் புரிந்து கொள்வது காலத்தின் கட்டாயம்.

**எம்.கே.சிவாஜிலிங்கம் இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் சுயேச்சையாகப் போட்டியிட்டார். குமார் பொன்னம்பலம் 1982 ஜனாதிபதித் தேர்தலில் தமது தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டார். இவர்கள் இருவரும் பொதுவேட்பாளராகப் போட்டியிட்டு என்ன நடைபெற்றது என இன்று ஒருவர் கேட்கிறார் என்றால், அவரது அரசியல் அறிவை என்னென்பது?**

# மதசார்பற்ற தமிழர் அரசியலை மதத்தீவிரவாதம் முந்திச் செல்வதற்கு முன்னதாக செய்யவேண்டியது என்ன?



குசல் பெரேரா

வடக்கில் தமிழர்கள் மத்தியில் மதத்தீவிரவாதம் வெளிக்கிளம்புவதற்கு யார் பொறுப்பு? மக்களின் உணர்வுகளை மதிக்காத - கொழும்பில் வாழ்க்கையைக் கொண்ட பொறுப்பற்ற தமிழ் தலைமைத்துவமே அதற்கு பொறுப்பு என்று நான் சொல்வேன்.

அநீதிக்கு எதிராகவும் ஜனநாயக மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் எந்தளவுக்கு வெளிப்படையாகவும் பற்றுறுதியுடனும் நிலைப்பாட்டை எடுக்கிறார்கள் என்பதிலேயே அவர்களின் பலம் தங்கியிருக்கிறது. சிங்கள தெற்கில் பிரதான அரசியல் நீரோட்ட தலைவர்கள் பெரும்பான்மை இனத்துவ தீவிரவாதத்தை முன்னெடுக்கிறார்கள். போரின் முடிவுக்கு பின்னரான தமிழர் அரசியலில் பாரம்பரிய அரசியல் தலைவர்கள் தங்களது மக்களுடன் நிற்கத் தவறியதே மதத்தீவிரவாதத்தை அனுமதிக்கிறது.

இது உண்மையில் எங்கிருந்து ஆரம்பித்தது? 2005 நவம்பரில் மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதியாக தெரிவு செய்ததுடன் இது ஆரம்பித்தது. சமாதானததைப் பேசுவதற்காக வடக்கு - கிழக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெருமளவில் வாக்களித்து 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றிபெறுவதற்கு நல்ல வாய்ப்பைக் கொடுக்கும் என்று அந்த நேரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

> **சம்பந்தன் - சுமந்திரன் தலைமைத்துவம் தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் கடைப்பிடித்த அரசியல் அலட்சியப்போக்கு அரசியல் மாற்று ஒன்று இல்லாமல் துடைத்தெறியக்கூடிய ஒரு சாதாரண தவறு அல்ல.**

ஆனால், அதற்கு பதிலாக புலம்பெயர் தமிழ்ச் சமூகம் "தமிழ் ஈழத்தை" வென்றெடுப்பது பற்றி பேசிக் கொண்டிருந்தது. "தமிழர்களுக்கு சமாதானம் இல்லை" என்று உரத்துக் குரலெழுப்புவதற்கும் ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படையுடன் "தனியான தமிழ் அரசு" ஒன்றுக்காக மேற்குலகின் ஆதரவைத் திரட்டவும் வசதியாக "கடும்போக்கு சிங்கள பௌத்தவாதியான" ராஜபக்சவை பதவியில் அமர்த்துவதற்கு அந்த சமூகம் தீர்மானித்தது.

இந்த கர்வத்தனமான சிந்தனை "தமிழ் ஈழம்" என்ற பிரபாகரனின் வெறித்தனமான அபிலாசையின் வழியில் அமைந்தது. விடுதலை புலிகளினால் தீர்மானிக்கப்பட்ட தேர்தல் பகிஷ்கரிப்பு 50.29 சதவீத வாக்குகளுடனும் ஒரு இலட்சத்து 80 ஆயிரத்துக்கும் சற்று அதிகமான பெரும்பான்மையுடனும் மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதியாக தெரிவுசெய்தது. வடக்கு - கிழக்கில் மாத்திரம் 10 இலட்சத்து 22 ஆயிரம் வாக்காளர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தார்கள்.


கடும்போக்கு சிங்கள பௌத்த தலைவர் ஒருவர் எந்தளவு செலவானாலும் அதைப் பொருட்படுத்தாமல் இறுதிவரை போரை முன்னெடுப்பார் என்பதை புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தெரிந்திருக்கவில்லை. 2002 பெப்ரவரி போர் நிறுத்த உடன்படிக்கை போரில் ஈடுபட்டு நன்கு அனுபவத்தைப் பெற்ற விடுதலை இயக்கப் போராளிகளை "நிருவாகிகள்" பதிவிகளுக்கு மாற்றியது. வயதில் நாற்பதுகளின் நடுப்பகுதியிலும் ஐம்பதுகளின் முற்பகுதியிலும் இருந்த அவர்கள் போரில் சலிப்படைந்து சமருக்கு செயலூக்கத்துடன் தலைமைதாங்கும் ஆற்றல் இல்லாதவர்களாகவும் இருந்தார்கள்.

நியூயோர்க்கில் 9-11 தாக்குதல் அரசு அல்லாத ஆயுதக்குழுக்கள் சகலதையும் உள்ளடக்கியதாக "உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போர்" என்ற சுலோகத்தின் கீழ் போர் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு வாய்ப்பைக் கொடுத்தது என்பதைப் புரிந்து கொள்ளாதவர்களாகவும் புலம்பெயர் தமிழர்கள் இருந்தார்கள். விடுதலை புலிகளும் விதிவிலக்காக இருக்கவில்லை. ஐரோப்பிய ஒன்றியம், வட அமெரிக்கா, இந்தியா மற்றும் அவிஸ்திரேலியா உட்பட சுமார் 35 நாடுகளில் அந்த இயக்கம் தடைசெய்யப்பட்டது.

2009 மே மாதத்தில் விடுதலை புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டபோது உயிருடன் எஞ்சியிருந்த தமிழர்களுக்கு வன்னியின் மனித அவலமே மிச்சமாக இருந்தது. அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஜனாதிபதி தேர்தல் பகிஷ்கரிப்பு அவர்களது எதிர்காலத்துக்கு எதையும் விட்டு வைக்கவில்லை. மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் விடுதலை புலிகளின் கீழ் வாழ்ந்த தமிழ் மக்கள் போருக்கு பின்னரான குழப்பநிலையில் ஒரு அரசியல் தலைமைத்துவம் கூட இல்லாதவர்களாக கையறு நிலையில் இருந்தார்கள். வெறுமனே பெயரளவில் மாத்திரம் இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுதலை புலிகளுக்கு ஒத்தூதிக்கொண்டே இருக்க வேண்டியிருந்தது.

அதுவே போருக்கு பின்னரான வடக்கு - கிழக்கு. போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றச்செயல்களுக்காக ராஜபக்சாக்களைத் தண்டிப்பதற்கு புலம்பெயர் தமிழ்ச்சமூகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை விரைந்து பற்றிப்பிடித்துக் கொண்டது. அந்த தீர்மானங்களே தமிழ் மக்களின் "அதிமுக்கியமான அரசியல் தேவை" என்று தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஆதரித்துநின்றது.

அதேவேளை, போரின் முடிவுக்கு பிறகு சரியாக ஒரு வருடம் கழித்து ஜனாதிபதி ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு களத்தில் உள்ள பிரச்சினைகளில் கவனம் செலுத்தியது. போரினால் பாதிக்கப்பட்ட சகல பகுதிகளிலும் ஆணைக்குழு பொது விசாரணை அமர்வுகளை நடத்தியது. சிதறிப்போயிருந்த தமிழ்ச்சமூகத்தை ஒன்றுபடுத்தி அவர்களின உடனடி மனக் குறைகளுக்கு



தீர்வைக் கோரும் வாய்ப்பு அதன் மூலமாக உள்ளூர் தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு கிடைத்தது.

**ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை**

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணவேண்டிய அவசியத்தை உணர்ந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 2010 செப்டெம்பரில் சமர்ப்பித்த "இடைக்கால அறிக்கையில்" பல விடயங்களுக்கு மத்தியில் பின்வரும் முன்மொழிவுகளைச் செய்திருந்தது.

(1) நீண்டகாலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் வழக்குகளை ஒவ்வொன்றாக ஆராய்வதற்கு ஒரு விசேட பொறிமுறை

(2) தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படவேண்டும்

(3) தடுப்புக்காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு அவ்வாறு விடுவிக்கப்பட்டதறனகான சான்றப்பத்திரம் வழங்கப்படவேண்டும். மீண்டும் அவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்படக்கூடாது.

(4) அரசாங்க ஆதரவுடனான குடியேற்றங்களுக்கு தனியார் நிலங்கள் பயன்படுத்தப்படாது என்று தெளிவான கொள்கை அறிக்கை ஒன்றை அரசாங்கம் வெளியிடவேண்டும்.

(5) அதிமுன்னுரிமைக்குரிய நடவடிக்கையாக சட்டவிரோத ஆயுதக்குழுக்கள் நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டும்.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினதும் வெளிநாட்டு நிதியுதவியுடன் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ராஜபக்ச விரோத அரசியலுக்கு இசைவான முறையில் தமிழ்

> **தமிழரசு கட்சிக்குள் நிலவும் தலைமைத்துவக் குழப்பத்தையும் தமிழ்ச் சமூகத்தில் உருப்படியான மாற்று அரசியல் அணியொன்று இல்லாத நிலையையும் அனுகூலமாகப் பயன்படுத்திக்கொண்டு இந்துத் தீவிரவாதம் செல்வாக்கு பெறக்கூடிய ஆபத்து வெளிப்படையாகத் தெரிகிறது.**

தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் விக்கிரமசிங்க அரசாங்கத்துடனான தங்களது செயற்பாடுகள் தமிழ் தேசியப் பிரச்சினைக்கு சகல தீர்வுகளுடனும் கூடிய புதிய அரசியலைமைப்பு ஒன்றைத் தரும் என்று நம்பினார்கள். அதனால் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் இருந்த மிகவும் அவசரமானதும் முக்கியமானதுமான முன்மொழிவுகளை அவர்கள் முற்றுமுழுதாக அலட்சியம் செய்தார்கள்.

வடமாகாண முதலமைச்சர் ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் அநாவசியமாக முரண்பட்டுக்கொண்டார்கள். மக்களை மையப்படுத்திய அபிவிருத்தி திட்டம் ஒன்றை முன்னெடுத்து வடக்கு நிருவாகத்தை இராணுவமய நீக்கம் செய்வதற்கு அவர்கள் முதலமைச்சருக்கு ஆதரவை வழங்கியிருக்க வேண்டும்.

**முன்மொழிவுகளுக்கு முக்கியத்துவமில்லை**

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கைக்கும் 2011 டிசம்பர் 16 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அதன் இறுதி அறிக்கைக்கும் எந்த முக்கியத்துவமும் கொடுக்காத தமிழ் தேசிய கூட்டமைப்பு 9 வது அத்தியாயத்தின் கீழ் 9.45 தொடக்கம் 9.74 வரையான பந்திகளில் காணப்பட்ட முன்மொழிவுகளை முற்றாக அலட்சியம் செய்தது. உனடியாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டியவை என்று ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் முன்வைக்கப்பட்ட அவதானங்களினதும் முன்மொழிவுகளினதும் ஒரு சுருக்கமாக அந்த பந்திகள் அமைந்திருந்தன.

8.193 பந்தியை கொழும்பு சிவில் சமூகமும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் நிச்சயமாக வலியுறுத்தியிருக்க வேண்டும். "சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிப்பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக் கப்பட்ட ஒரு சிவில் நிறுவ னமே பொலிஸ் திணைக்களம். அதனால் அரசின் பாதுகாப் புக்கு பொறுப்பான ஆயுதப் படைகளுடனான தொடர்பு களில் இருந்து பொலிஸ் திணைக்களம் பிரிக்கப்பட வேண்டும் என்று அந்த பந்தியும் சிவிலியன் நடவடிக் கைகளில் பாதுகாப்பு படைகளின் ஈடுபாடு படிப்படி யாக நீக்கப்படவேண்டும், பாதுகாப்பு படைகளினால் தனியார் நிலங்கள் பயன்படுத்தப்படுவதை நியாயபூர்வமான கால எல்லை கொடுக்கப்பட்டு இல்லாமல் செய்யவேண்டும் என்று 9.171 பந்தியும் கூறுகின்றன.

மேற்குலகில் பெரிய ஆரவாரம் செய்ப்பட்டபோதிலும், ஐக்கிய நாடுகள் சபையின் 14 வருடகால தீர்மானங்கள் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு எந்தப் பயனையும் கொண்டுவரவில்லை. மாறாக, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவசியமான தேவைகளுக்கு முக்கியமானதாக இருந்தபோதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதனால் வடக்கு - கிழக்கு மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையின் தேவைகளுக்கும் தாங்கள் எதிர்நோக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கும் பரிகாரம் வேண்டி ஆர்ப்பாட்டம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

ராஜபக்சாக்களை தண்டிப்பதற்கு முன்னதாக "காணாமல்போன" தங்களது உறவினர் பற்றிய தகவல்கள் அந்த மக்களுக்கு அவசரமானவையாகும் முக்கியமானவையாகவும் இருந்தன. இழந்த தங்களது நிலங்களையும் அன்றாட வருமானத்துக்கான ஆதாரங்களையும் மீளப்பெறுவதில் அவர்கள் கடும் அக்கறை செலுத்தினார்கள்.

**அன்புக்குரிவர்கள் எங்கே?**

காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களைக் கோரி வடக்கிலும் கிழக்கிலும் ஆர்ப்பாட்டம் செய்யும் தாய்மார்களுக்கும் மனைவிமார்களுக்கும் ஆதரவளிப்பது குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் எந்தவொரு தலைவரும் ஒருபோதும் நினைக்கவில்லை. வடக்கு, கிழக்கில் சிவில் சமூகத்தை அரசியல் ரீதியில் அணிதிரட்டி அவர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கவும் முயற்சிகள் செய்யப்படவில்லை.

2,495 நாட்களுக்கு தொடர்ச்சியாக போராடுவது என்பது ஒன்றும் சாதாரணமான விடயம் இல்லை. "எங்களது அன்புக்குரியவர்கள் எங்கே?" என்ற கேள்வியுடன் 2023 டிசம்பர் இறுதிவரை தொடர்ச்சியாக ஆறு வருடங்களும் ஒன்பது மாதங்களும் போராட்டத்தில் ஈடுபடுவது என்பது ஒன்றும் பகிடி இல்லை.

போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த தாய்மாரையும் மனைவிமாரையும் மகிந்த ராஜபக்சவுக்கு பிறகு

(14ஆம் பக்கம் பார்க்க)

# வட கடல், தென் கடல் மீன்பிடிக் கூட்டு ஆணையம்

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

*“இந்திய மீனவர், எல்லையைத் தாண்டி இலங்கைக் கடல் எல்லைகளுள் மீன்பிடிப்பது முறையற்றதுதான். ஆனாலும் கடலுக்குப் புறப்படும் எந்த மீனவரும், மீன்வளம் எங்கிருக்கிறதோ அங்கேயே போவர்! எனவே, இந்திய - இலங்கை எல்லைக் கோட்டைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவரைத் தடுக்க முடியுமா? அப்படி அவர்கள் சென்றால் அவர்களை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுடலாமா? துப்பாக்கியால் சுடாதீர்கள், இந்திய மீனவர்களைக் கொல்லாதீர்கள்” என இலங்கை அரசிடம் கூறியுள்ளோம். ஒத்துழைப்பதாக இலங்கை அரசும் உறுதி அளித்துள்ளது.’*

இந்தக் கருத்துகளமைந்த செய்தியை இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம். கே. நாராயணன் 31.5.2007 அன்று சென்னையில் கூறியுள்ளார். தமிழக மீனவருக்கு இந்தக் கருத்துரை மகிழ்ச்சியைத் தரும்.

கரையை விட்டுக் கடலுக்குள் புறப்படும் மீனவர், எல்லைக் கோடுகளை அறிவாரா? கடலுக்குள் கற்பனையாக உள்ள எல்லைக் கோட்டினைத் துல்லியமாகத் தெரிந்து கொண்டா கடலில் தொழில் செய்கின்றனர் மீனவர்?

வட கடலிலும் தென் கடலிலும் மீன்பிடிப்பவர்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் வாழ்கின்ற தமிழ் மீனவர்களே. இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் நீர்கொழும்பு தொடக்கம் சிலாபம் வரை வாழும் சிங்கள மீனவரும் தென் கடலின் தென் பகுதிக்கு வருவதுண்டு.

வட கடல் 10,000 சதுர கிமீ. தென் கடல் 20,000 சதுர கிமீ. ஆக மொத்தம் தோராயமாக 30,000 சதுர கிமீ. பரப்பளவுக் கடலின் உயிரின வளத்தை இந்த இரு




கரைகளிலும் வாழும் மீனவர் தேடுகின்றனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே அனைத்துலக எல்லைக்கோடு உண்டு. இந்தக் கோட்டினை 1974 ஆம் ஆண்டு இந்திரா காந்தியும் சிறீமாவும் ஒப்பமிட்ட உடன்பாட்டில் வரையறுத்தனர்.

இந்த எல்லைக் கோடு, வங்காள விரிகுடாவும் வட கடலும் சந்திக்கும் கடலில் (11° 26” வடக்கு 83° 22” கிழக்கு) தொடங்கி, தென்மேற்காக வளைவுகளுடன் 275 கிமீ. வரை நீண்டு, தென் கடலும் அரபிக் கடலும் சந்திக்கும் கடலில் (05° 00” வடக்கு 77 10.6” கிழக்கு) முடிவடைகிறது.

இந்த இருதரப்பு எல்லைக் கோட்டுக்கு வெளியே அனைத்துலக உடன்பாடுகளுக்கு அமைய இந்தியப் பொருளாதார வலையமும் இலங்கைப் பொருளாதார வலையமும் அவ்வவ் நாட்டு எல்லைகளாக விரிகின்றன.

தமிழகத்தின் நாகப்பட்டினத்திலிருந்து கன்னியாகுமரி வரை நீள்கின்ற கடற்கரை தோராயமாக 750 கிமீ. ஆகும். இலங்கையின் பருத்தித்துறையிலிருந்து சிலாபம் வரை நீள்கின்ற கடற்கரையும் தோராயமாக 700 கிமீ. ஆகும். இந்த இரு கடல்களை ஒட்டிய தமிழகக் கடலோரத் தில் தோராயமாக 500,000 மீனவரும், இலங்கையை ஒட்டிய கடலோரத்தில் தோராயமாக 300,000 மீனவ ரும் வாழ்கின்றனர்.

இந்த இரு கடல்களின் தமிழகக் கரையோர மீனவர் ஆண்டுக்குத் தோராயமாக 350,000 மெ.தொன் கடல் உயிரினங்களையும், இலங்கை மீனவர் ஆண்டுக்குத் தோராயமாக 250,000 மெ.தொன் கடல் உயிரினங்களையும் கரை சேர்க்கின்றனர்.

30,000 சதுர கிமீ. பரப்பளவுக் கடலில் 800,000 மீனவர் 600,000 மெ.தொன் கடல் உயிரின வளங்களைக் கரை சேர்க்கின்றனர். ஆண்டு ஒன்றுக்கு 1 சதுர கிமீ. பரப்பளவுக் கடலில் தோராயமாக 18 - 25 மெ.தொன் மீன் பிடிபடுகிறது. ஆண்டொன்றுக்கு ஒரு மீனவர் 0.75 - 1 மெ.தொன் கடல் உயிரினத்தைப் பிடித்து வருகிறார். மேற்கூறிய தோராயப் புள்ளி விவரங்கள் சமகால நிகழ்வுகளின் வெளிப்பாடு.

நாட்டு எல்லைகளை மீனவர் தாண்டலாம், மீன் வளம் எங்கிருக்கிறதோ, தேடிப் பிடித்து வரலாம் என்ற கருத்து மீனவரிடையே உண்டு. எல்லை காட்டி மிதவைகளை அமைத்து, அவரவர் நாட்டுக் கடல் எல்லைகளுக்குள் மீனவரை முடக்காமல், மீனைத் தேடிப் பரந்து செல்லும் வாய்ப்பையே இரு கரைகளிலும் வாழும் தமிழ் மீனவர் பெரிதும் வரவேற்பர்.

காலாதி காலமாக இந்த இரு கடல்களின் எதிரெதிர் கரைகளிலும் வாழும் தமிழ் மீனவர் கடலுக்குத் தொழி




லுக்கு வந்தால், தமக்குள்ளே ஆகக் குறைந்த சச்சரவுகளையும் ஆகக் கூடிய ஒத்துழைப்புகளையும் வழங்கிக் கடலில் மீன் பிடித்தனர். எல்லைகளை அமைக்காது மீன் பிடித்தனர்.

1921இல் ஒரு முயற்சி, பின்னர் 1974இல் அடுத்த காத்திரமான முயற்சி. இதன் விளைவே இந்திய இலங்கை எல்லைக் கோடு.

கரையிலிருந்து கடலுக்குள் அகலும் 22 கிமீ. வரையுள்ள ஆட்சி எல்லைக் கோடுகள், 44 கிமீ. வரை அகலும் ஆட்சித் தொடர் எல்லைக் கோடுகள், 320 கிமீ. வரை அகலும் பொருளாதார வலைய எல்லைக் கோடுகள், யாவும் அனைத்துலகக் கோட்பாடுகளாக இருப்பினும், இத்தகைய எல்லைக் கோடுகளைக் கடந்து மீனவர் தம் தொழிலைச் செய்ய உலகின் பல நாடுகளில் வசதிகள் உண்டு.

கடல் வளத்தைப் பேணவும் நாடுகடந்த மீனவரின் உரிமையைக் காக்கவும், மேற்காணும் மூவகை எல்லைகளைத் தாண்டி மீன்பிடிக்கலாம் என்ற முறைமை உலகெங்கும் வழக்கிலுள்ள ஒன்றாகும்.

யப்பானும் கொரியாவும் தமக்கு இடையிலுள்ள கடலில் இருநாட்டு மீனவரும் மீன்பிடிக்க ஏற்பாடு செய்துள்ளன. Agreement on Fisheries between Japan and the Republic of Korea https://worldjpn.net/documents/texts/; The North Pacific Fisheries Commission (NPFC) https://www.npfc.int/

நோர்வே, சுவீடன், பின்லாந்து, ருசியா ஆகிய நாடுகள் தமக்குப் பொதுவான கடலில் தத்தம் நாட்டு மீனவர் அனைவரும் கடல் எல்லைகளைத் தாண்டி மீன் பிடிக்கும் உரிமங்களை வழங்கியுள்ளன. Joint Russian-Norwegian Fisheries Commission (JRNFC) https://jointfish.com/eng/; EU-UK-Norway agreement https://oceans-and-fisheries.ec.europa.eu/news/

இத்தகைய உடன்பாடுகள் அவ்வவ் நாடுகள் இணைந்து அமைக்கும் கூட்டு ஆணையங்களாகி உலகெங்கும் மீனவருக்கும் கடல் வளப் பாதுகாப்புக்கும் பயன்படுகின்றன. கடலில் வளம் இருந்தால், அந்த வளம் குன்றாமல் இருந்தால், மீனவர் அந்த வளத்தைப் பயன்படுத்தலாம். மீன்பிடிப்பதால் வளம் குன்றினால் எந்த மீனவச் சமு தாயத்துக்கும் கடல் பயன் தராது. உயிரின உற்பத்தி




கடலில் தொய்வின்றித் தொடர்ந்தால், மீனவர் வாழ்வு பெறுவர். முதனிலைத் தாவர உற்பத்தியும் அதைத் தொடரும் விலங்கின உயிர்ப் பெருக்கமும் மொத்தக் கடல் உயிரின உற்பத்திக்கு உள்வரவுகள். மீன் பிடித்தல் மொத்த உற்பத்தியின் வெளியேற்றம்.

உள்வரவும் வெளியேற்றமும் சம அளவாக இருந்தால் உற்பத்திச் சமன்பாடு இருக்கும். வெளியேற்றம் கூடுதலாக இருந்தால், அதுவும் ஆண்டு தோறும் இந்த வெளியேற்றம் கூடுதலாகித் தொடருமானால் கடல் வளம் குன்றும். ஈற்றில் உயிரின வளமற்ற பாலையாகக் கடல் மாறும். சமன்பாட்டு மீன்பிடி அளவை முதலில் தீர்மானிக்க வேண்டும். மீனவர் தொகைக்கேற்ப, இருநாட்டவருக்கும் அந்தச் சமன்பாட்டு மீன்பிடி அளவில் எந்தெந்த மீன் வகைக ளில் எவ்வெவ்வளவு பங்கு என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

உயிரின இனப்பெருக்கக் காலத்தில் மீன்பிடித் தடை இரு நாடுகளுக்கும் பொதுவாகவேண்டும்.


குறிப்பிட்ட இறங்கு துறைகளில் மட்டுமே மீன்பிடியைக் கரைசேர்க்க வேண்டும். அந்த இறங்கு துறைகளில் கரைசேரும் மீன்பிடி அளவுகளை நாள்தொறும் குறிக்க வேண்டும். இரு கரைகளிலுமுள்ள இறங்கு துறைகளில் கரை சேரும் மீன்களின் மொத்த அளவு எந்தெந்த மாதத்துக்கு எந்தெந்த வகைக்கு எதுவாக இருக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்து அந்த அளவை எட்டியதும் மீளவருக்கு அறிவித்து அந்த வகை மீன்பிடியை நிறுத்த வேண்டும்.

எந்த இறங்கு துறையிலும் எந்த நாட்டு மீனவரும் தம் பிடிபாட்டைக் கரை சேர்க்கலாம். எங்கே சந்தை உள்ளதோ, எங்கே விலை அதிகம் கிடைக்கிறதோ, எங்கே மீன் சேமிப்பு வசதி நன்றாக உள்ளதோ, அங்கே செல்வதால், தம் பிடிபாட்டை இறக்குவதால், தம் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை மீனவர் பெறுவர்.

இறங்கு துறைகளில் கண்காணிப்புக் கூட்டாக நடைமுறையில் இருக்கும். இந்த நடைமுறைகளுக்காக அக்கடலைச் சார்ந்த நாடுகள் இணைந்து ஓர் ஆணையத்தை நிறுவும். அந்த ஆணையமே, அந்தக் கடலின் மீன் வளத்துக்குப் பொறுப்பாக இருக்கும். எல்லை கடந்து மீன் பிடிக்க உலகெங்கும் நடை முறையிலுள்ள ஏற்பாடுகள் இவை. வட கடலும் தென் கடலுமாக 30,000 சதுரப் பரப்பளவு. அந்தப் பரப்பளவில் சமன்பாட்டு உற்பத்தி எந்த அளவு என்பதைக் கண்டறிய வேண்டும். இரு கரைகளிலுமுள்ள அரசுகள் கூட்டாக ஆணையம் ஒன்றை நிறுவ வேண்டும்.

மீன் உற்பத்தி, மீன் பிடிபாடு இரண்டும் பொதுவாக இருப்பினும், அறிவியலும் தொழில்நுட்பமும் வேகமாக வளர்கின்றன. மக்கள் தொகையும் வேகமாக வளர்கின்றது. எனவே இத்தகைய வட தென் கடல் மீன்வளக் கூட்டு ஆணையத்தின் பணி தொடர்ச்சியான பணி.

கடலின் பரப்பளவு மாறமல் இருக்கிறது. கடலின் உயிரின மொத்த உற்பத்தி மாறாமல் இருக்கிறது. இருகரைகளிலும் வாழ்கின்ற மீனவர் தொகை கடந்த 50 ஆண்டுகளில் மும்மடங்காகப் பெருகி உள்ளது.




கட்டுமரங்கள் பல, விசைப் படகுகளாயின. இழுவை வலைப் படகுகள் புகுந்தன. நெகிழ் (நைலோன்) வலைகளும் இழுவை வலைகளும் பெருகின. மீன்பிடி அளவும் வேகமாக உயர்ந்தது.

மீன்பிடி எந்த அளவுக்கு உயரலாம் என்பது பற்றி இதுவரை தோராய மதிப்பீடுகளும் பொட்டல் பொட்டலான ஆய்வுகளுமே நடந்தேறியுள. உற்பத்திச் சமன்பாட்டு அளவைத் தீர்மானிக்கப் போதுமான கள ஆய்வுத் தரவுகளும் பகுப்புகளும் மிகக் குறைவு.

எந்தத் துறையில் எந்தத் தொழில்நுட்பம்? எந்த மீன்பிடிக் கருவி? எத்தகைய விசைகொண்ட படகு? எந்த வகை மீனுக்கு எந்தக் கண் வலை? இழுவையா? மிதப்பா? விடுகையா? படுகையா?

எந்தக் காலம் இனப்பெருக்க காலம்? எப்போது தடை? எந்தத் துறையில் என்னென்ன சேமிப்புக் கிடங்குகள்? உலர்தலா? உறைபனி அறைச் சேமிப்பா? ஏற்றுமதிக்கா? பதனிடவா?

உற்பத்தி, இருப்பு, பிடிபாடு, தொழில்நுட்ப உள்ளீடு, மீனவர் தொகை வளர்ச்சி எனத் தொடரும் வெவ்வேறு கூறுகளின் சமன்பாட்டை நெறிப்படுத்தி, நாளாந்த நடைமுறைகளைக் கண்காணித்து, எதிர்காலத் திட்டங்களை வகுத்து, வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் வழிகாட்டுவதே இந்த ஆணையத்தின் பொறுப்பு.

மீனவரின் தொழிற் பரப்பெல்லை கட்டுப்பாடின்றி இருக்க அனைத்துலக வழிகாட்டல்களும் எடுத்துக் காட்டுகளும் இந்தப் படிமுறை நிலைகளைச் சார்ந்தன.

இந்தக் கூட்டு ஆணையத்திடம் வட, தென் ஆகிய இரு கடல்களின் செயற்பாடுகள் வருமாயின், கடற்படைக்கு அங்கு பணி ஏதும் இருக்காது.

தமிழக மீனவர் ஈழக் கடல் எல்லைக்குள் சென்று மீன் பிடிப்பர் ஈழத் துறைகளில் மீன் விலை அதிகமாக இருப்பின் அங்கேயே தம் பிடிபாடுகளை விற்பர். அல்லது தம் துறைகளில் கூடுதல் விலையை எதிர்பார்த்துப் பாதுகாப்பாகத் தமிழகம் திரும்புவர்.

ஈழத்து மீனவரும் தமிழகக் கடல் எல்லைக்குள் வருவர் மீன் பிடிப்பர் நல்ல விலை கிடைக்குமாயின் தமிழகத் துறைகளிலேயே தம் பிடிபாடுகளை விற்பர் அல்லது தம் துறைகளுக்கு எடுத்துச் செல்வர்.

மீனவர்களின் உணர்வை வெளிப்படுத்துகின்ற, இரு நாட்டு மீனவரும் அன்னியோன்னியமாக ஒருவருக்கு ஒருவர் ஆதரவுடன் மீன்பிடிப்பதற்கான அடித்தளமாகக் கூட்டு ஆணையம் அமையும்.

இரு நாட்டுச் சட்டங்களையும் நடைமுறைப்படுத்த, சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான காவல் துறையே போதும். கடற்படைகள் தேவைப்படா.

இத்தகைய கூட்டு ஆணையத்தின் முகாமையில் இக் கடற் பரப்பு வருமாயின் தமிழக, ஈழத் தமிழ் மீனவரின் வளமான எதிர்காலம் அமையுமே. (2007இல் எழுதிய கட்டுரை இது)

# கனடாவில் செல்வி அதிசாவின் சலங்கைப்பூசை

**குரு அரவிந்தன்**

செல்வி அதிசாவின் சலங்கைப்பூசை அண்மையில் கனடா, மார்க்கத்தில் அமைந்துள்ள கலைக் கோவில் மண்டபத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. சலங்கைப்பூசை என்று சொல்வதைவிட, எமது இளைய தலைமுறையினருக்கு எமது பாரம்பரிய கலைகளை அறிமுகம் செய்யும் ஒரு நிகழ்வாகவே இது இருந்தது. "வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற் கிணங்க அகவை எட்டு நிரம்பிய அதிசா தனது மூன்று வயதில் இருந்து கலைக்கோவில் நடன ஆசிரியை நாட்டியக் கலாநிதி சிறிமதி வனிதா குகேந்திரனிடம் நடனத்தைச் சாத்திர முறைப்படி கற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அதிசா திலீபன் தனது நடனத்தில் ஒவ்வொரு பாடலிலும் இசைக்கேற்ப, தாளம் பாவம் கலந்து தன் உணர்வை வெளிப்படுத்தி, தமிழ் மொழியை நன்கு விளங்கி அதனை உள்வாங்கித் தன் உள்ளுணர்வுடன் நடனம் ஆடி, சபையிலுள்ளவர்களை ஆச்சரியப்பட வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவரது தங்கையான மூன்று வயது நிரம்பிய குழந்தை அய்ரா திலீபன் "சின்னச் சின்ன முருகா! சிங்கார முருகா" என்ற பாடலுக்கு அக்கா அதிசாவுடன் சின்னக்காலால் தாளம் தப்பாமல் பாவத்துடன் பொருளை உணர்ந்து ஆடிய விதம் சபையோர் எல்லோரையும் மெய்மறக்கச் செய்தது,

மிருதங்க வித்வான் குகேந்திரன் அவர்கள் இந்தப் பிள்ளைகளையும், இவர்களின் தாயார் நவகீதா அவர்களையும் வாழ்த்தி 'பெற்றவர்கள் மட்டும் பெற்றோர்கள் அல்ல, பிள்ளைகளின் வளர்ச்சியில் பங்கு பெறும் அனைவருமே பெற்றோர்கள்தான்' என்று குறிப்பிட்டார்.

அடுத்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட எழுத்தாளர் குரு அரவிந்தன் தனது உரையில், 'இங்குள்ள பிள்ளைகளை இதுபோன்ற ஏதாவது ஒரு துறையில்







ஈடுபட வைப்பதன் மூலம் எதிர்காலத்தில் பிள்ளைகளை ஆரோக்கியமான உடல், உள நலத்துடன் வாழவைப்பது மட்டுமல்ல, எமது மொழியையும், பாரம்பரிய கலைகளையும் இந்த மண்ணில் தொடர்ச்சியாகத் தக்க வைக்க முடியும் என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எதற்காகக் கனடிய மண்ணில் கடந்த 30 வரு டங்களாக நாங்கள் பாடுபட்டோமோ அது, இது போன்ற இளைய தலைமுறையினரால் முன்னெடுக்கப் படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது' என்று குறிப்பிட்டார்.

அடுத்து எழுத்தாளர் இணையத் தலைவர் அகணி சுரேஸ், மார்க்கம் நகரசபை உறுப்பினர் யுனைற்றா நாதன், மற்றும் அதிசாவின் கல்லூரி ஆசிரியர் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம் பெற்றன.

'சலங்கைப்பூசை என்பது ஒரு ஆரம்பம், இதனைத் தொடர்ச்சியாக இடை நிறுத்தாமல் தொடர்ந்து பயின்று அடுத்த தலைமுறையினர் எமது கலைகளைப் பயில்வதற்கு நீங்கள் இருவரும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்றும், கனடிய மண்ணில் எமது தமிழ் மொழி, பண்பாட்டுடன் புது வரலாறு படைத்து, ஆரோக்கியமாக வாழ வேண்டும்' என்றும் இளம் தலைமுறையினருக்கான கனடாவில் இருந்து வெளிவரும் 'வதனம் இதழ்' சார்பாக அதிசா, அய்ரா இருவரையும் அதன் நிர்வாக ஆசிரியரான கமலவதனா சுந்தா வாழ்த்தினார்.

சலங்கைப் பூசைக்கு வருகை தந்தோருக்குச் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு நிகழ்வு மிகவும் சிறப்பாக நிறைவுற்றது.

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**ஆர். புஸ்பகாந்த்,**
**2ஆவது ஒழுங்கை, தெகிவளை.**

**கேள்வி:** *யாழ்ப்பாணத்திலிருந்து நள்ளிரவு வேளைகளில் சுண்ணக் கற்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டு திருகோணமலைக்கு கொண்டு செல்லப்படுகின்றன என்று மக்கள் தன்னிடம் முறையிட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள சிறிதரன் எம்.பி., அந்த இடங்களை பார்வையிட்டபோது 20 முதல் 25 அடிவரை நிலம் அகழப்பட்டிருக்கிறது. இவ்வாறு அகழப்பட்ட சுண்ணக்கற்கள் பிறிதோர் இடத்துக்குக் கொண்டு சென்று சேர்த்த பின்னர் நள்ளிரவு வேளை திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்படுகிறது என்கிறாரே. பொலிஸ், ராணுவத்தினர் மீது அவர் குற்றம் சாட்டுவது சரியானதுதானே?*

**வியுக்தியார்:** *அவர் அவ்வாறு சுண்ணக்கற்கள் அகழும் இடத்தைத் தான்சென்று பார்த்ததாகவும் கூறியிருக்கிறார். அதுமாத்திரமல்ல, அவ்வாறு அகழப்படும் கற்கள் வேறு ஒரு இடத்தில் சேமிக்கப்பட்டு பின்னரே திருகோணமலைக்கு கொண்டுசெல்லப்படுகின்றது என்றும் கூறியிருக்கிறார். இவ்வளவு விடயங்களையும் தெரிந்து வைத்திருக்கின்ற அவர், அப்படி செய்கின்ற இடத்திலேயே போய் அதற்கு எதிராக குரல்கொடுப்பது தான் சரியானது. இது என்ன ஒழித்து மறைத்து கொண்டுபோகக்கூடிய ஒன்றா? நமது வளங்கள் சூறையாடப்படுகின்றது என்றால் அதற்கு எதிராக எவ்வாறு எதிர்வினையாற்றவேண்டும் என்பதையும் மக்கள் பிரதிநிதிகள் தெரிந்துகொள்ள வேண்டாமா?*

---

**கே. ராம்குமார்,**
**பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** *ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் - தாக்குதலுடன் தொடர்புடைய அனைவருக்கும் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி அளித்துள்ளதே. அப்படி நடக்கும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?*

**வியுக்தியார்:** *நான் நம்பவது இருக்கட்டும், பேராயர் மல்கம் ரஞ்சித் நம்பியிருப்பாரா என்று அல்லவா கேட்டிருக்கவேண்டும். தேசிய மக்கள் சக்தியினர் எழுத்துமூலம் இதுகுறித்து ஆயருக்கு உறுதியளித்த பின்னர்தான், ஆயரும் கோட்டாபய தன்னை ஏமாற்றி விட்டதாக அறிக்கை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கை மூலம் பேராயர் சொல்வது என்ன என்பதை நாம் புரிந்துகொள்ளலாம் தானே. கோட்டாபய என்னை ஏமாற்றினார், ஆனால் உங்களால் என்னை இனி ஏமாற்றமுடியாது என்கின்றார் என்று நினைக்கின்றேன். அதாவது அவர்களின் உறுதிமொழியை அவர் நம்பியதாக தெரியவில்லையே.*

---

**ப. அபிஷேக்குமார், எல்லை வீதி, மட்டக்களப்பு.**

**கேள்வி:** *சிறீ லங்கா சுதந்திரகட்சியின் ஆட்சியையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே. இது நம்பக்கூடியவாறா இருக்கின்றது?*

**வியுக்தியார்:** *அதனைச் சொன்னவர் ஒரு சட்டத்துறை கலாநிதி. அவருக்கு தான் சொல்வது நம்பக்கூடியவாறு இருக்கின்றதா என்பதை தெரிந்துகொள்ளாமல் கூறியிருக்கமாட்டார். ஆனால் அவரும் ஒரு அரசியல்வாதிதானே. தான் போகின்ற போது அங்கே கூடியிருக்கின்ற மக்கள் தனக்கு கைதட்டவேண்டும் என்று நினைப்பதில் தவறில்லையே. அவர் இவ்வாறு கூறியது. சுதந்திரக்கட்சியின் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் 108வது பிறந்த தின வைபவத்தில் அல்லவா. அந்த வைபவத்தில் சிறிமாவோவின் ஆதரவாளர்கள் இருப்பார்கள் என்பதால் அவர்களை மகிழ்விக்க - கைதட்டு வாங்குவதற்காக அவர் சொன்னதையெல்லாம் சிரியசாக எடுப்பதா?*

---

**நடராஜா ரவீந்திரன்,**
**பாசையூர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** தேசிய நல்லிணக்கத்தின் மூலமே தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** *அவர் சொல்வது மிகச் சரியானதே. ஆனால் தேசிய நல்லிணக்கம் என்பது ஜனாதிபதி ரணிலுக்கும் அமைச்சர் டக்ளசுக்கும் இடையே ஏற்படுகின்ற நல்லிணக்கம் அல்ல. அது சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே ஏற்படவேண்டும். அதற்கு யாரும் இதுவரை எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லையே.*

**அ. சிவகணேஸ்,**
**சங்கரத்தை, வட்டுக்கோட்டை.**

---

**கேள்வி:** *ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த நான்கு முக்கியஸ்தர்களை பெயர் குறிப்பிட்டு தம்முடன் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி. தலதா அத்துக்கோரள, கபீர் ஹாசிம், ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கி ரமரத்ன ஆகியோருக்கே ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கே பண்டார அழைப்பு விடுத்துள்ளாரே. இப்படி பெயர்சொல்லி அழைப்பது எதற்காக என்று நினைக்கின்றீர்கள்?*

**வியுக்தியார்:** *அது வேறு ஒன்றுமல்ல, யார் யாரெல்லாம் தம்மோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களின் தலைவர் சஜித்துக்கு சொல்கிறார்கள் என்று நினைக்கின்றேன். இப்படிச் சொன்னால் சஜித் அவர்கள் மீது தனது அதிருப்தியைக் காட்டுவார் அல்லவா, அதன் பின்னராவது அவர்கள் வருகிறார்களா பார்ப்போம் என்று நினைக்கிறார்கள் போலும்.*

---

**சிவபாலன் செந்துஜன்,**
**கதிரேசு வீதி, வவுனியா.**

**கேள்வி:** *மக்களுடன் கலந்துரையாடி, மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவே தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் - என்று அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளாரே. தென்னாபிரிக்காவில் அரசமைப்பு முன்வைக்கப்பட்டபோது மக்களிடம் பரந்துப்பட்டளவில் கலந்துரையாடப்பட்டது என்றும் தேசிய மக்கள் சக்தியின் முதலாவது நாடாளுமன்ற ஆட்சிகாலத்துக்குள் மக்கள் மயப்படுத்தப்பட்ட புதிய அரசமைப்பு முன்வைக்கப்படும் என்கிறார் அவர். இது நடக்கும் என்று நினைக்கின்றீர்களா?*

**வியுக்தியார்:** *அவர்கள் ஆட்சிக்கு வருவார்களா என்று கேட்டால் அதற்கு பதில்சொல்வது கடினமானது. ஏனெனில் நமக்கு தெரியாத சங்கதிகளில் இந்த வியுக்தியார் தலையை நுழைப்பதில்லை. ஆனால் ஆட்சிக்கு வந்தால், மக்கள் மயப்பட்டதாகவே அரசியலமைப்பு இருக்கும் என்கிறார். அதற்கு அவர் தென்னாபிரிக்காவையும் சாட்சிக்கு அழைத்திருக்கிறார். உங்களுக்கு தெரியும் தென்னாபிரிக்காவில் மிகச்சிறுபான்மையினரான வெள்ளையர்கள் பெரும்பான்மையான கறுப்பர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சியிலிருந்தனர். பின்னர் பெரும்பான்மையான கறுப்பினத்தவர்களின் ஆதரவுடன் புதிய அரசியலமைப்பு உருவானது. அவர் சொல்வது நமது நாட்டின் பெரும்பான்மையான மக்களுடன் கலந்துரையாடி என்றால், வடக்கு கிழக்கை நிரந்தரமாக பிரித்ததுபோல மாகாணசபைகளையும் இல்லாமல் செய்வாரோ தெரியவில்லையே.*

# ருவாண்டா இனவழிப்பின் 30வது ஆண்டு !
# இனப்படுகொலையை தடுக்க தவறிய சர்வதேசம்!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ருவாண்டாவில் தற்போது எவருமே இனம் பற்றி பேச சட்ட ரீதியாக தடை விதிக்கப்பட்டுள்ளது. இனம் பற்றி பேசினால் அது நிஜமான நல்லிணக்கம் உருவாவதற்கு தடையாகவே இருப்பதாக ருவாண்டா அரசாங்கம் வாதிடுகிறது.

நீண்ட கால வறுமையின் பிடியிலிருந்து ருவாண்டா நாடு வேகமாக வெளிவந்துள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களில் ருவாண்டாவின் பொருளாதாரம் சராசரியாக ஒன்பது வீதம் என்ற அளவில் வளர்ந்துள்ளது. இது சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கு நிகரான ஒரு வளர்ச்சி ஆகும்.

அத்துடன் 1994களில் இனப்படுகொலையில் ஈடுபட்ட குற்றவாளிகள் மீதான சட்ட நடவடிக்கை என்று எடுத்துக் கொண்டால், இருபது லட்சம் பேருக்கு எதிராக உள்ளூர் நீதிமன்றங்களிலும், கொலைவெறிக் கும்பல்களின் தலைவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் மீது அயல்நாடு தான்ஸானியாவிலும் வழக்கு விசாரணை நடந்துள்ளது.

**இன அழிப்பின் முப்பதாவது ஆண்டு**

கொடூரமான ருவாண்டா இனவழிப்பின் முப்பதாவது ஆண்டு நினைவு தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. 1994ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதியிலிருந்து 1994 ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி வரையில் 800,0000க்கும் மேற்பட்ட டூட்ஸி,(Tutsi) இன மக்களை, ஹூட்டு (Hutu) பெரும்பான்மையினம் கொன்றொழித்திருந்தது.

ருவாண்டா இன அழிப்பு நடந்து கொண்டிருந்த சமயத்தில், இவ் இன அழிப்பை சர்வதேச சமூகமானது குறிப்பாக பலம் வாய்ந்த சர்வதேச சக்திகள் கவனத்தில் எடுக்கவில்லை. மேலும், படுகொலை இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் நடைபெற்றுக் கொண்டிருப்பது இனவழிப்பென ஏற்றுக் கொள்ள சர்வதேச சக்திகள் மறுத்திருந்தன.

நீண்ட காலத்திற்கு பின்னரே ருவாண்டாவில் நடைபெற்றுக் கொண்டிருப்பது இனவழிப்பு நடவடிக்கை என ஐ.நா. குறிப்பிட்டிருந்த போதும் இந்நடவடிக்கைகள் இனவழிப்புக் குற்றத்தில் உள்ளடங்குபவை என கூறத் தயாராக இருக்கவில்லை.

**பழங்குடியின ருவாண்டா**

ருவாண்டா 26 ஆயிரம் சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவு கொண்ட நாடாகும். இதன் மக்கள் பல்வேறு பழங்குடிக் குழுக்களைச் சார்ந்தவர்கள். ஆதியில் வந்தவர்கள் 'ட்வா' என்றும் , பின்னர் வந்தவர்கள் இன்று பெரும்பான்மை மக்கள் என அறியப்படும் ஹூட்டு பிரிவைச் சார்ந்தவர்கள்.

1700களில் எட்டு அரசுகளாக அங்கு உருவாகின. அதில் ஓர் அரசான டூட்ஸி நயிகின்யாவின் ஆட்சியில் தனிப் பெரும் அரசாக உருவெடுத்தது. அதன் முக்கிய மன்னனான கிகேலி ர்வாபுகிரி (Kigeli Rwabugiri) பல நிர்வாகச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். டூட்ஸி மக்கள் சமூகத்தின் மேற்படியில் அமர்த்தப்பட்டனர். ஹூட்டுக்கள் டூட்ஸி குழுத் தலைவர்களுக்கு வேலை செய்தனர்.

அப்போதிருந்து டூட்ஸிக்களுக்கும், ஹூட்டுகளுக்கும், சமூகப் பொருளாதார, அரசதிகாரப் பிரிவினைகள் துவங்கின. அதன்பின் 1884 பெர்லின் மாநாட்டின் வழியாக, ருவாண்டா ஜெர்மனிக்கு அளிக்கப்பட்டது. ஜெர்மனி, உள்ளூர் அரசர் வழியாக ருவாண்டாவை ஆண்டுவந்தது.

**ருவாண்டா பெல்ஜிய ஆதிக்கத்தில்**

முதலாம் உலகப் போருக்குப் பின், ருவாண்டா பெல்ஜியத்தின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ஜெர்மனியைப் போல் இல்லாமல், பெல்ஜியம் நேரடியான நிர்வாகத்தில் ஈடுபட்டது. ருவாண்டாவை நவீனப்படுத்தும் முயற்சிகள் துவங்கின. அதில் ஓர் அங்கமாக, நிலச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, நிலம் தனியார்மயம் ஆக்கப்பட்டது. இந்தச் சீர்திருத்தத்தில், பொருளாதாரத்தின் மேற்படியில் இருந்த டூட்ஸிகள் பயனுற்றார்கள்.

ஹூட்டுக்கள் தம் நிலங்களை குறைந்த இழப்பீட்டுத்



தொகைக்கு இழந்து, டூட்ஸிகளின் கீழ் நிலமற்ற வேளாண் கூலிகள் ஆனார்கள். பெல்ஜியம் செய்த சீர்திருத்தம்தான் ஒரு பேரழிவை அறிவியல் பூர்வமாகச் செய்ய உதவியாக இருந்தது. அதுவே மக்களை ஹூட்டு, டூட்ஸி, ட்வா மற்றும் குடியேறிகள் எனப் பிரித்து அடையாள அட்டை கொடுத்தார்கள்.

மக்கள் பிறப்பின் அடிப்படையில் டூட்ஸி, ஹூட்டு, ட்வா எனப் பிரிக்கப்பட்டார்கள். அதற்கு முன்பு, ஒரு பணம் படைத்த ஹூட்டு, தன்னை டூட்ஸி என மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு இருந்தது. இதுபோன்ற வழிகள் அடையாள அட்டைக்குப் பின்பு நிரந்தரமாக அடைக்கப்பட்டன.

**ருவாண்டா இனப்படுகொலை:**

1959ல் ருவாண்டாவின் டூட்ஸி மன்னராட்சி முறையை ஒழித்துவிட்டு ஹூட்டூக்கள் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தனர். டூட்ஸி இனத்தார் உகாண்டாவுக்கும் பிற அண்டை நாடுகளுக்கும் வெளியேறினர்.

> **1994ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதியிலிருந்து 1994ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி வரையில் 800,0000க்கும் மேற்பட்ட டூட்ஸி, சிறுபான்மை இன மக்களை, ஹூட்டு பெரும்பான்மையினம் கொன்றொழித்திருந்தது**

அவர்கள் ஆர் பி எஃப் அதாவது ருவாண்டா தேசப்பற்று முன்னணி என்ற கிளர்ச்சிக் குழு ஒன்றை அமைத்து ருவாண்டாவுடன் சண்டையிட்டு வந்தனர்.


1990ல் அந்நாட்டின் மீது படையெடுத்தனர். 1993ல் ருவாண்டாவுக்கும் இவர்களுக்கிடையே சமாதான உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டிருந்தது. 1994 ஏப்ரல் 6இல் ருவாண்டாவின் அதிபரான ஹூட்டூ




இனத்தைச் சேர்ந்த ஹப்யாரிமனா சென்ற விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. ஹூட்டூ கடும்போக்காளர்கள், டூட்ஸி இனத்தாரை ஒட்டுமொத்தமாக அழித்துவிட வேண்டும் எனத் திட்டமிட்டு கொலைவெறியாட்டத்தில் இறங்கினர்.

**திட்டமிட்ட இன வெறியாட்டம்:**

ருவாண்டா அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் யார் யார் என்று கவனமாக அடையாளம் காணப்பட்டு அவர்கள் எல்லாம் திட்டமிட்டு குடும்பத்தோடு கொன்று குவிக்கப்பட்டனர். டூட்ஸி இனத்தவரை அவரது அயல் வீட்டில் வாழ்ந்த ஹூட்டூ இனத்தவரே கொன்ற அவலமும், டூட்ஸி மனைவியை அவருடைய ஹூட்டூ கணவனே கொன்றது போன்ற கொடூரங்களும் அப் போது அரங்கேறின.



கொலைகளைத் தாண்டி டூட்ஸி இனப் பெண்கள் ஆயிரக்கணக்கானோர், பிடித்துச் செல்லப்பட்டு பாலியல் அடிமைகளாகவும் நடத்தப்பட்டனர். திட்ட மிட்டு ஒருங்கிணைக்கப்பட்டு கொலைகள் அரங்கேறின.

1994ஆம் ஆண்டு ஏப்ரல் காலகட்டத்தில் ருவாண்டாவில் எட்டு லட்சம் பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இறந்தவர்கள் பெரும்பான்மையாக டூட்ஸி இனத்தவர். கொலை வெறியாட்டத்தில் ஈடுபட்டவர் கள் பெரும்பான்மையாக ஹூட்டு இனத்தவர் ஆவார்கள்.


ருவாண்டாவின் அப்போதைய சனத்தொகையில் 85மூ சதவீதம் பேர் ஹூட்டு இனத்தார் என்றாலும், அங்கு சிறுபான்மையாக வாழ்ந்துவந்த டூட்ஸி இனத்தாரின் கை வணிகத்திலும், பொருளாதாரத்திலும் மேலோங்கியிருந்தது என்பது உண்மையே.

**இனவழிப்ப சர்வதேசம் ஏற்கவில்லை:**

ருவாண்டாவில் நடைபெற்றதனை இனவழிப்பு நடவடிக்கை என சர்வதேசம் குறிப்பிட்டிருந்தபோதும் இந்நடவடிக்கைகள் இனவழிப்புக் குற்றத்தில் உள்ளடங்குபவை என அப்போது கூறத் தயாராக இருக்கவில்லை.

இது தொடர்பாக அமெரிக்காவின் இயலாமை குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் செய்தியாளர் சந்திப்பின்போது எத்தனை "இனவழிப்பு நடவடிக்கைகள்" இனவழிப்பாகும் என பிரபலமான குறிப்பிடத்தக்க கேள்வியை ஒரு ஊடகவியலாளர் வினவியிருந்தார்.

1994ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் திகதி வரை அந்




நேரத்தில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளராக இருந்த றுயசசநெ ஊாசளைவழிாநச, ருவாண்டாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் படுகொலை, இனவழிப்புக் குற்றமென ஏற்றுக் கொள்ளவில்லை.

**ருவண்டா தேசிய முண்ணனி :**

படுகொலையை இனவழிப்பென சர்வதேச சக்திகள் எற்க தயங்குவதற்கு காரணம் நடைபெற்றது இனப்படுகொலையென அங்கீகரித்தால் அதனைத் தடுக்க வேண்டிய சட்டக் கடப்பாடு இருப்பதே ஆகும். அந் நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படையின் தலைவராகவிருந்த கொபி அனான் (Kofi Annan) ருவாண்டா இனப்படுகொலையை தடுக்கத் தவறியமைக்கு காரணம் அதனைப்பற்றி மேற்குலக நாடுகள் அறியாமல் இருந்தது என்பதல்ல, மாறாக மேற்குல நாடுகளின் அரசியல் நிலைப்பாடுகளே காரணமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது சர்வதேச சக்திகளோ ருவாண்டா இனவழிப்பை நிறுத்தவில்லை. ருவாண்டா மக்களின் விடுதலை இயக்கமான ருவண்டா தேசிய முண்ணனியே (Rwandan Patriotic Front) அவ் இனவழிப்பை நிறுத்தியது.

**ஐநா கொலைகளை தடுக்கவில்லை:**

அந்த நேரத்தில் ஐநா அமைதிகாப்பு படைகளும் மற்றும் பெல்ஜியம் படைகளும் அவ்விடத்தில் இருந்தாலும், இந்த கொலைகளை தடுக்க வேண்டிய உத்தரவு அவர்களுக்கு சென்றிருக்கவில்லை.

ஹூட்டூ அரசாங்கத்துக்கு நெருக்கமாக இருந்த பிரஞ்சு அரசாங்கம் பாதுகாப்பு வலயம் ஒன்றை அமைத்தாலும் அதுவும் கொலைகளைத் தடுக்க போதிய முயற்சி எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரான்சும் கூட கொலைகளில் சம்பந்தப்பட்டிருந்ததாக ருவாண்டாவின் தற்போதைய அதிபர் குற்றம் சாட்டுகிறார். ஆனால் பிரான்ஸ் அரசு அதனை மறுக்கிறது.

பின்னர் டூட்ஸி இன கிளர்ட்ச்சிக் குழுவினர் வலுவாக அணிதிரண்டு ஹூட்டுக்களை ருவாண்டாவை விட்டு விரட்டி ஆட்சியைக் கைப்பற்றினர்.

ஹூட்டூக்கள் ஆயிரக்கணக்கானோரை அப்போது டூட்ஸி கிளர்ச்சிக்காரர்கள் கொன்று குவித்ததாக குற்றம் சாட்டப்படுகிறது.

**பொருளாதார ரீதியில் முன்னேற்றம்:**

இனக்கொலை வெறியாட்டம் முடிந்து அமைதி திரும்பிய பின்னர் ருவாண்டாவில் ஆர் பி எஃப் கிளர்ச்சிப் படையின் தலைவர் பால் கிகாமே அதிபராக வந்து, பொருளாதார ரீதியில் நாட்டை முன்னேற்றியுள்ளார்.

# இது எங்கட துறை...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

நித்திர முழிச்சு அஞ்சு, பத்து கிலோ மீன் பிடிச்சும், அதையும் வெயில நாரவைக்கிற, மோசமான நிலையில தான் நாங்க இருக்கிறம்" என கவலை தெரிவிக்கின்றார்.

இறுதி யுத்தத்தில் தனது ஒற்றை காலை இழந்து, இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில், மூன்று பிள்ளைகள் மற்றும் மனை விவை, கடற்றொழில் செய்து, வளர்த்து வரும் கிராமத்து மீனவர் திரு. நகுலேஸ்வரன், "நாங்கள் கடலுக்கு போய் மீன் பிடிக்கிற தொழில மட்டும் செய்யல, கடற்கரையில ஏரல் கிண்டி, நண்டு புடிச்சு, தூண்டிலும் போட்டு, வலையும் வீசுவம். ஆனால் இப்ப எங்கட துறையில இதை செய்யவே பயமா இருக்கு..." என அஞ்சுகிறார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவிலுள்ள, சிலா வத்தை தெற்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலை வரும், யுத்தத்தின்போது தனது ஒரு கையை இழந்த மீனவருமாகிய யோகேந்திரன், "நான் பிறந்து, வளர்ந்து, உழைச்சது இந்த மண்ணில. இந்த மண்ணிலதான் என்ர கையை இழந்தனான். இந்த மண்ண விட்டுற்று போய், எங்கேயுமே தொழில் செய்ய மாட்டேன்..." என கண்ணீர் வடிக்கின்றார்.

இங்குள்ள மற்றுமொரு இக்கிராம மீனவரான, இராமகிருஸ்ணன், "இண்டைக்கு கோயில் திருவிழா அதனால எங்கட ஊரில யாருமே கடலுக்கு போக மாட்டோம். கிறிஸ்தவர்களின் தேவாலய பெருநாளின் போது இந்துக்களும், இந்துக்களின் கோயில் திரு விழாவின் போது கிறிஸ்தவர்களும் அந்த நாளை கடவுளுக்காக விட்டுட்டு யாருமே கடற்றொழிலுக்கு பேகமாட்டங்கள். இன்டைக்கு எல்லாருக்கும் விடுமுறை நாளாத்தான் இருக்கும்" எனக் கூறு வதிலிருந்து கிரா மத்து மக்களின் ஒற்றுமையைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கையின் கடற்கரையோர பாதுகாப்பு சட்டத்திற்கமைய, ஒவ்வொரு கரையோர பகுதியிலும், கடலிருந்து பாதுகாப்பு வலயமாக 100 அல்லது 200 மீட்டர் தூரம் உள்ளன. இந்த அளவு, ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள ஒவ்வோர் இடங்களின் கடற்கரையை பொறுத்து வேறுபடும். எனவே குறித்த பகுதியை யாருமே சொந்த உரிமை கொண்டாட முடியாது.

குறித்த கிராமத்து மக்களின் பிரச்சினை தொடர்பாக, கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள, உதவிப் பணிப்பாளர், "சிலாவத்தை தெற்கு இறங்குதுறை, திடீரென வந்த இறங்குதுறை அல்ல, இந்த இறங்கு துறைக்கு நீண்ட வரலாறு உண்டு, மக்களின் உரிமை சும்மா பறிபோகக் கூடாது, எப்பொழுதும் நீதி வெல்லப் பட வேண்டும்" எனக் கூறியிருந்தார்.

நீண்ட கால யுத்தத்தினாலும், சுனாமிப் பேரலையினாலும் தாக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்து, தமக்குரிய அனைத்தையும் இழந்து, இன்று தமது வாழ்வைக் காத்துக் கொள்ள ஏங்கும் மக்கள், தமது இறங்குதுறைக்கு அருகில் சுற்றுலாத் தளம் அமைப்பதை விரும்புவதோடு அதனை வரவேற்கின்றனர். சுற்றுலாத் தலங்கள் உருவாகும்போது தமது கிராமமும் விருத்தியடையும். கிராம வளர்ச்சியுடன் தமது தொழில் நடவடிக்கை சிறப்பாக இடம்பெற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். ஆனால் இந்த சுற்றுலாத் தளத்தினை காரணம் காட்டி, தங்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடையூறு அல்லது தடை ஏற்படுத்த வேண்டாம் என்பதே இக்கிராம மக்களின் மனநிலையாகவுள்ளது, என்பதை எவ்வித ஐயமுமின்றி அறிந்துகொள்ள முடிகின்றது.

எனவே சம்மந்தப்பட்ட பிரச்சினையில் ஒவ்வொரு தரப்பினரிடமும் நியாயங்கள் இருக்கலாம். அவை மதிக்கப்பட வேண்டும். ஆனால் பொறுப்பதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இப்பிரச்சினையில் நியாயமான முறையில் தலையிட்டு, அமைதி வழியில் ஒர் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி, மக்களின் இயல்பு வாழ்விற்கு ஆவன செய்ய வேண்டியது, தற்போது மிக அவசியமானதொரு விடயமாகவே உள்ளது.

# எழில் கொஞ்சும் மலர்க் கண்காட்சி ஆரம்பம்


நுவரெலியா, ஏப். 21

நுவரெலியா நகரில் வசந்த காலத்தையொட்டி வருடம் தோறும் நடைபெறும் மலர்க் கண்காட்சி விக்டோரியா பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மலர்க் கண்காட்சி நேற்றுச் சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனை ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் கண்டுகளித்து வருகின்றனர்.

ஏப்ரல் மாத வசந்த காலத்தில் ஒரு கட்டமாக வருடம் தோறும் குறித்த மலர்க் கண்காட்சி நடைபெறும். இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இம்மலர்க் கண்காட்சியில் விதவிதமான மலர்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட உருவ பொம்மைகள், மிருகங்களின் உருவம், காய்கறிகளின் உருவம் என பல வடிவங்களில் உருவ அலங்காரங்களும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன .

நுவரெலியா மாநகர சபையின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த மலர்க் கண்காட்சியை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. பி. ரத்நாயக்க திறந்து வைத்தார். (எ)









# மதசார்பற்ற தமிழர் அரசியல்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று ஜனாதிபதிகள் ஏழு வருடங்களுக்கும் கூடுதலான காலமாக அலட்சியம் செய்திருக்கிறார்கள். இந்த போராட்டங்களில் சம்பந்தப்பட்டவர்களில் 180 க்கும் அதிகமான தாய்மாரும் உறவினர்களும் கடந்த ஏழு வருடங்களில் இறந்து விட்டதாக வலிந்து காணாமல் செய்யப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமாக ஐ.நா. பிரகடனம் செய்த கடந்த ஆகஸ்ட் 30 காணாமல் போனோரின் உறவினர்கள் சங்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தது. அந்த ஏழு வருட காலத்திலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களும் ஏனைய அரசியல் தலைவர்களும் எங்கே போனார்கள்?

தீர்வு காணப்படாத இந்த பிரச்சினைகள் எல்லாம் போதாது என்று கடந்த ஒரு தசாப்த காலத்தில் தமிழர் களின் நிலங்கள் சிங்கள சமூகத்தவர்களினால் ஆக்கிர மிக்கப்படும் போக்கும் தீவிரமடைந்திருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அரசு அலட்சியம் செய்திருக்கிறது அல்லது அரச ஆதரவுடன் சிங்கள பௌத்த தீவிரவாதிகள் இந்த ஆக்கிரமிப்புகளுக்கு அனுசரணை செய்கிறார்கள்.

மன்னாரிலும் வடபகுதி கடல் பரப்பிலும் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பை தடுத்துநிறுத்த அரசாங்கம் அக்கறையுடன் நடவடிக்கை எடுக்காததால் நெருக்கடி தீவிரமடைந்திருக்கிறது. இடம்பெற்ற மோதல்களில் யாழ்ப்பாண மீனவர்கள் இருவர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்த வரை, அவர்களின் பிரச்சானை களும் மனக்குறைகளும் அதிகரிக்கின்றன. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களுக்கோ அல்லது வேறு எந்த அரசியல் தலைவருக்குமோ அவற் றைப் பற்றி அக்கறை கிடையாது.

**அரசியல் அலட்சியத்தின் விளைவுகள்**

வெட்கக்கேடான இந்த அரசியல் அலட்சியத்தின் விளைவுகளை வடக்கு, கிழக்கு தேர்தல் முடிவுகளில் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. ஜனாதிபதி தேர்தல்களில் சிங்கள தெற்கின் இரு பொது வேட்பாளர்களை ஆதரித்த பிறகு தமிழ் தேசிய கூட்டமைப்பு 2015 பாராளுமன்ற தேர்தலில் சமஷ்டி முறையின் அடிப்படையிலான தீர்வைக் காணும் உறுதிமொழியுடன் கூடிய விஞ்ஞாபனத்தை முன்வைத்து போட்டியிட்டது. கூட்டமைப்பில் இருந்து கூடுதல்பட்ச எண்ணிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யுமாறு அதன் தலைவர் இரா. சம்பந்தன் வடக்கு, கிழக்கு வாக்காளர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

பெரிய பாராளுமன்ற பிரதிநிதித்துவத்துடன் சமஷ்டித் தீர்வொன்றுக்கு உறுதியான ஆணையைத் தந்தால் தெரிவு செய்யப்படவிருந்த விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அனுகூலமாக இருக்கும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் கூறினார்கள். சமஷ்டித் தீர்வைப் பிரதான சுலோகமாகக் கொண்டு கூட்டமைப்பில் இருந்து 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானார்கள். பதிவுசெய்யப்பட்ட 884, 326 வாக்குகளில் மொத்தம் 470, 542 வாக்குகள் அவர்களுக்கு கிடைத்தன. 45 ஆயிரம் வாக்குகளுடன் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் இருந்து ஒரேயொரு உறுப்பினர் பாராளுமன்றத்துக்கு தெரிவானார். தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் இருவருடன் சேர்த்து எல்லாமாக கூட்டமைப்பின் சார்பில் 16 உறுப்பினர்கள் பாராளுமன்றம் சென்றார்கள்.

ஒவ்வொரு பிரச்சினையிலும் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பாதுகாக்கும் பிரமையுடன் செயற்பட்ட சம்பந்தன் - சுமந்திரன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்புடன் மேலும் ஒரு ஐந்து வருடங்களை அதிகரித்துக் கொண்டிருந்த பிரச்சினைகளுடனும் வேதனையுடனும் தமிழ் மக்கள் கழித்தார்கள். மக்களின் உணர்வுகளை மதிக்காமல் அரசியல் அலட்சியத்துடன் செயற்பட்ட கூட்டமைப்பை 2020 ஆகஸ்ட் பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் நிராகரித்தார்கள். தெரிவுசெய்யப்பட்ட முன்னைய 14 பாராளுமன்ற உறுப்பினர்களில் ஐவரை இழந்த கூட்டமைப்புக்கு தேசியப் பட்டியல் மூலமும் ஒரேயொரு ஆசனமே கிடைத்தது.

வேறு மூன்று தமிழ்க்கட்சிகளில் இருந்து நான்கு பேர் பாராளுமன்றத்துக்கு தெரிவானார்கள். கஜேந்திர குமாரின் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்தது. தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு 327, 168 வாக்குகள் கிடைத்தன. 2020 ஆம் ஆண்டில் வாக்காளர்கள் தொகை பத்து இலட்சத்து 8 ஆயிரமாக அதிகரித்திருந்த போதிலும், 2015 தேர்தலில் பெற்ற கூட்டமைப்பு பெற்ற வாக்குளையும் விட இது 143, 374 வாக்குகள் குறைவானதாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியலைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்ட போதிலும் அதன் மக்கள் ஆதரிவின் சரிவைத் தடுக்க முடியவில்லை. தமிழரசு கட்சியின் தலைமைத்துவத்தின் பொறுப்பற்ற அரசியல் போக்கை மாற்று அரசியல் அணியொன்று சவாலுக்கு உட்படுத்தாத நிலையில், சம்பந்தன் - சுமந்திரன் தலைமைத்துவத்துக்கு ஒரு மாற்றாக இந்து சார்பு நகர்வொன்றின் மூலம் மாற்றம் பிரதிபலித்திருக்கிறது போன்று தோன்றுகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வெளியில் கூட "மக்கள் சார்பான" எந்தவொரு அரசியல் மாற்று அணியும் இருப்பதாக தெரியவுமில்லை.

தமிழரசு கட்சிக்குள் நிலவும் தலைமைத்துவக் குழப்பத்தையும் தமிழ்ச் சமூகத்தில் மாற்று அரசியல் அணியான்று இல்லாத நிலையையும் அனுகூலமாகப் பயன்படுத்திக்கொண்டு இந்து தீவிரவாதம் செல்வாக்குப் பெறக்கூடிய ஆபத்து வெளிப்படையாகத் தெரிகிறது. இலங்கையில் இந்து மதம் ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது என்றும் அதனால் நாட்டில் உள்ள இந்துக்களை ஓரணியில் திரட்டுவதற்காக ஜனாதிபதி தேர்தலில் இந்து பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என்றும் "சிவசேனை" என்ற உதிரி அமைப்பொன்று அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

தமிழரசு கட்சியின் சம்பந்தன் - சுமந்திரன் தலைமைத்துவம் தமிழ் மக்களை இரக்கமற்ற முறையில் அலட்சியம் செய்தமை அரசியல் மாற்று ஒன்று இல்லாமல் துடைத்தெறியக்கூடிய சிறிய ஒரு தவறு அல்ல. மதசார்பற்ற அரசியலை மதத்தீவிரவாதம் முந்திச்செல்வதற்கு முன்னதாக மிகவும் தீர்க்கமானதும் தெளிவான சிந்தனையுடன் கூடியதுமான அரசியல் தீர்மானம் ஒன்றை அது அவசரமாக வேண்டிநிற்கிறது.

(நன்றி பைனான்சியல் ரைம்ஸ், ஏப்ரில் 17, 2024 )

## ஐக்கிய....

உறுதிமொழியை தான் வழங்குவதாக வும் சஜித் கூறினார்.

தினக் கூட்டத்துக்காக நாங்கள் கோரிய இடத்தை அரசாங்கம் வேறு ஒரு தரப்புக்கு வழங்க முனைகின்றது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு அரசாங்கம் பயப்படுகின்றது. அரசாங்கம் இடம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் ஒரு இலட்சம் தொழிலாளர்களை அழைத்து கொழும்பில் மக்கள் சார் தொழிலாளர் புரட்சியை முன்னெடுப்போம் எனவும் சஜித் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் மாநாடு நேற்று மாலை மட்டக்களப்பு காந்திபூங்காவில் நடைபெற்றபோது கலந்துகொண்டு உரையாற்றுகையில் சஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மயிலத்தமடு பிரச்னை குறித்து நான் இங்கு பேசவேண்டும்.பல ஆட்சியாளர்கள் வருகின்றார்கள், உத்தரவாதங்களை தருகின்றார்கள். இந்த வருட இறுதிக்குள் உங்களுக்கு இந்த மேய்ச்சல் தரை பிரச்னைக்கான சிறந்த உத்தரவாதம் வழங்கப்படும். அந்த பகுதி விலங்குகளுக்கு உணவுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான மிக முக்கியமான பகுதியாக இருக கின்றது.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்லியல்சார்ந்த இடங்கள் மத ரீதியான இடங்களில் காணப்படும் பிரச்சினைகளும் முக்கிய மாகவுள்ளது. இலங்கையில் அனைத்து இனமக்களும் வாழ்கின்றார்கள், அனைத்து மதத்தவர்களும் வாழ் கின்றார்கள்.

அனைவருக்கும் சுதந்திரம் இருக்கின்றது.அனைவருக்கும் பொதுவான இடங்கள் உள்ளன.அனைவரையும் ஒன்றாக வாழும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

இந்த பிரதேச மக்கள் இனம், மதம், மொழிகடந்து அனைவரையும் ஒன்றாக இணைத்து சகோதரத்துவத்துடன் வாழும் சூழ்நிலையை நாங்கள் ஏற்படுத்த வேண்டும்.நாங்கள் மதம்சார்ந்த, இனம்சார்ந்த எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் இடம் கொடுக்கமாட்டோம் என்ற உத்தரவாதத்தை தருகின்றேன். -என்றார். (எ)

## ஈரான்....

எரிபொருள் வழங்குநராக காணப்படுகின்றது.

ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியில் தொண்ணூறு சதவீதம் சீனாவுக்கு விநியோகிக்கப்படுவதுடன் இந்தியா மற்றும் ஜப்பானுக்கும் ஈரான் எரிபொருளை ஏற்றுமதி செய்கின்றது.

இந்நிலையில் இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து இலங்கை கணிசமானளவு எரிபொருளை கொள்வனவு செய்வதை பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், ஈரானுக்கு இலங்கை சுமார் 80 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன், ஈரானில் இருந்து 10 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்கின்றது.

இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளில் ஈரான் 61ஆவது இடத்தில் உள்ளது.

ஈரான்-இஸ்ரேல் மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் அமெ ரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஈரான் மீது பல்வேறு தடைகளை விதித்துள்ளது.

இஸ்ரேல் லிபியாவில் உள்ள ஈரான் துணைத் தூதரகம் மீது மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத் தளபதிகள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

பதில் தாக்குதலாக ஈரான் சுமார் 300 ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல்களும் போட்டிகளும் மேலும் அதிகரிப்பதுடன் உலகப் போராக வெடிக்கும் அபாயம் காணப்படுவதாகவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (அ)

## ஆயிரத்து....

அறிவிக்காமல் வெளிநாட்டுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த வைத்தியசாலையின் பணிப்பாளர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேவையாற்றிய இரண்டு மயக்கவியல் வைத்திய நிபுணர்கள் முன்னறிவிப்பின்றி வெளிநாட்டுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு....

தெரிவித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்த கால மாநாட்டுக்காக வொஷிங்டன் சென்றுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பாரிஸ் கிளப்பின் இணைத்தலைவர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களையும் சந்தித்து கலந்துரையாடி வருகின்றார். (அ)

## ஈஸ்டர்....

பொலிஸ் அதிகாரியொருவர் யூரியூப் அலைவரிசைக்கு வழங்கியதாக கூறப்படும் நேர்காணலை மேற்கோள்காட்டி அவர் இந்த விடயங்களை முன்வைத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான வாக்குமூலங்களை பெறுவதற்கு சிறில் காமினி நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், அவரிடம் 04 மணிநேரம் வாக்குமூலமும் பெறப்பட்டது.

இதன்போது இதுவரை வெளிவராத எட்டு விடயங்களை அவர் முன்வைத்ததாக கூறினார்.

"முதலாவதாக, 2018 ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதியன்று வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் உயிரிழந்த இடத்தில் சந்தேகத்திற்கிடமான பொருட்களை வைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன விற்கு தகவல் கிடைக்கக்பெற்றது. அந்த பொருட்களை அங்கு வைத்தது யார்?

"இரண்டாவது, சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பது தெரியவந்த ஐ.பி. முகவரியை பயன்படுத்தியவர்கள் யார்?

"மூன்றாவது, வவுணதீவு சம்பவம் தவறாக சித்தரிக்கப்பட்டது. அதாவது வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொலை செய்யப்பட்டமைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என இராணுவ புலனாய்வு பிரிவினர், முன் னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவிற்கு பொய்யான தகவல்களை முன்வைத்தமை தற்போது தெரியவந்துள்ளது.

"நான்காவதாக, தெஹிவளையில் தாக்குதல் மேற்கொள்வதற்கு முன்னர் தற்கொலை குண்டுதாரியின் தொலைபேசிக்கு அழைப்பு வந்தமை சி.சி.ரி. வியில் பதிவாகியுள்ளது. அழைப்பினை ஏற்படுத்தியவர்கள் யார்?

"ஐந்தாவது, தெஹிவளையில் தாக்குதல் மேற்கொண்ட தற்கொலைதாரியின் வீட்டிற்கு சென்று விசாரணை மேற்கொண்ட அதிகாரிகள் யார்?

ஆறாவது விடயம்,கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் தற்கொலை குண்டுத்தாக்குதல் மேற்கொண்ட தற்கொலைதாரியை அழைத்து வருமாறு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பில் இருந்த சுரேஷ் சலே, அசாத் மௌலானாவிடம் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

ஏழாவது,2018 ஆம் ஆண்டு புத்தளத்தில் சுரேஷ் சலேவிற்கும் சஹ்ரானுக்கும் இடையில் சந்திப் பொன்று இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எட்டாவது விடயமாக,உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சஹ்ரான் மனைவியிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அபுஹிந் என்ற நபர் தொடர்பில் கூறியுள்ளார். உண்மையில் யார் அந்த அபுஹிந்" என கேள்வி எழுப்பியுள்ளார். (அ)

## ஜனாதிபதித்....

இன சுத்திகரிப்பும் (Structural Genocide and Ethnic Cleansing of Tamils in Sri Lanka) ஆங்கில நூல் வெளியீடு நல்லூரிலுள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகத்தின் வாசஸ்தலத்தில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

இதுவரை காலமும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநியாயங்களை (தெரிந்த அளவுக்கு ஆங்கிலத்தில்) ஆவணப்படுத்தியுள்ளோம். இந்நூலின் தமிழ் மற்றும் சிங்கள மொழி பெயர்ப்புக்கள் விரைவில் வர இருக்கின்றன. எனினும் பிறநாட்டு நல்ல நிஞர்களுடனும் இராஜதந்திரிகளுடனும் ஐக்கிய நாடுகள் போன்ற உலகக் கட்டமைப்புகளுடனும் எமது நிலையை அவர்கள் புரிந்து கொள்ளவும் இனி வருங்காலத்தில் இலங்கையின் வடக்கு கிழக்கில் பொது மக்கள் வாக்கெடுப்பு ஒன்றை ஐக்கிய நாடுகள் நிகழ்த்தவும் எமது உள்நாட்டு மற்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் எமது நிலை பற்றிய ஒரு கைநூலை கொண்டிருக்கவும் ஏதுவாக இந்த நூலை தற்போது வெளியிடுகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தல் வருகின்றதோ இல்லையோ நானறியேன். அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுமோ என்றும் கூறமுடியாது. தற்போதைய அரசாங்கம் மேலும் தொடர பொது மக்கள் வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுமோ நானறியேன்.

ஆனால் எமது தமிழ் மக்கள் நிலைபற்றிய ஆவணத்தை தற்போது வெளியிடுவது தான் சாலச் சிறந்தது என்று நாம் கருதுகின்றோம்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் ஆவணங்களாக இது வரையில் இரண்டு முக்கிய ஆவணங்கள் வெளிவந்துள்ளன. முதலில் 30 வருட அஹிம்சை வழிப் போராட்டத்தின் பின்னர் 1976இல் வெளியிடப்பட்ட வட்டுக் கோட்டைப் பிரகடனம்.

அடுத்து 30 வருட ஆயுதப் போராட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட வடமாகாணசபையின் 2015ஆம் ஆண்டின் இனவழிப்பு தீர்மானம்.

தற்போதைய நூல் மேற் கண்ட இரு ஆவணங்களின் தொடர்ச்சியாகவே வெளியிடப்படுகின்றன. அதாவது இது வரையில் வடகிழக்கு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அநியாயங்களை முழு விபரங்களுடன் உரிய அடிப்படை ஆராய்வு நூல்களின் விபரங்களுடன் வெளியிட்டுள்ளோம்.

இதன் உள்ளடக்கங்களை வாசித்து அறிபவர்கள் ஓரளவு எம் மக்களுக்கு இதுகாறும் நடந்த அநியாயங்களை, அட்டூழியங்களை புரிந்து கொள்வார்கள். மெது இந்த நூலின் குறிக்கோள் நடந்தவற்றைத் தெரியப்படுத்தலும் தெளிவான நடவடிக்கைகளை அரங்கில் ஏற்படுத்தலுமாவன. சிங்களவர், தமிழர். புலம்பெயர்ந்தோர், சர்வதேச மக்களுக்கு நிறுவனங்களும், அண்மைக் காலங்களில் இலங்கையில் நடந்தேறியவை எவை, யார் அவற்றின் சூத்திரதாரிகள், அவற்றை எவ்வாறு அவர்கள் நடத்தியுள்ளார்கள் என்று அறிந்து கொள்ளும் வகையில் அத்தியாயங்களை ஒழுங்கு படுத்தி தற்போதைக்குக் கிடைத்த விபரங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளார் ஆசிரியர்.

மக்கள் யாவர்க்கும் எமக்கு நடந்தவற்றை நடப்பவற்றை தெரியப்படுத்தல் இதன் நோக்கம். பலர் நடந்தவற்றை அறியாமலேயே தமது கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். அது தவறு. இந் நூலைப் படித்துவிட்டு அவர்கள் தம் கருத்துக்களை வெளியிடட்டும்.

அடுத்து பொறுப்புக் கூறல், நீதியைப் பெறுதல், வடகிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேசத்துக்கு எடுத்தியம்பி வலியுறுத்தி எமக்கான பொது மக்கள் வாக்கெடுப்பை உறுதி செய்வது போன்றவை எமது நோக்கம்.

பொது வாக்கெடுப்பை தாமதமின்றி இயற்றுதல் அவசியம். ஏற்கனவே தமிழர் தம் வடகிழக்கு பாரம்பரிய இடங்கள் பல பறிபோய் வேற்று இனத்தவர் அங்கு குடிகொண்டுள்ளார்கள். இங்கு நடக்கும் அரச மற்றும் அரச சார்புப் படைகள் மற்றும் வேற்று இனத்தவர்களின் நடவடிக்கைகளினால் எமது மக்கள் பலர் வெளிநாடுகளைத் தஞ்சமடைந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படியே போனால் வாக்களிக்க தமிழ் மக்கள் இவ்விருமாகாணங்களிலும் மிகவும் குறைந்து விடுவார்கள். இதை எண்ணியே இந் நூலை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் சர்வதேச நிறுவனங்களுக்கும் புலம்பெயர் எமது உறவுகளுக்கும் அறிமுகப்படுத்த எண்ணியுள்ளோம். இவ்வாறான ஒரு கைநூல் தமிழ் மக்கள் தமக்கு நேர்ந்த அவலங்களை அறிந்து கொள்ள மிகவும் உதவுகின்றது.

பல இடங்களில் சிங்களத் தலைவர்கள் எம்மிடம் கேட்கும் கேள்விதான் மற்றைய இலங்கை மக்களுக்கு ஏற்படாத அவலங்கள் வற்றைத் தமிழ் மக்கள் அனுபவித்துள்ளார்கள் என்பது. நாம் இதுவரையில் 95 சிலவற்றை எடுத்தியம்பினாலும் இனி வருங்காலத்தில் இந்த நூலை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி "இதை வாசியுங்கள். உங்களுக்குப் புரியும்" என்று கூறி இருக்கின்றோம்.

அதே போல் நாம் பூகோளச் சமூகத்திற்கு எம்மைப் பற்றிய விபரங்களைத் திரட்டி அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம். அதையே இன்றைய அறிமுக நூலின் ஆசிரியர் செய்துள்ளார் நாம் செய்துள்ளோம் எமது கட்சி செய்துள்ளது - என்றார். (எ)

## தனது....

தீர்மானிக்கப்படவில்லை என கொழும்பில் உள்ள ஈரான் தூதுவரும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளா விட்டால் உமா ஓயா திறப்பு தினத்தை ஒத்திவைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஈரான்-இஸ்ரேல் இடையிலான பதற்றத்தை தணிக்க ஐ.நாவும் மேற் குலக நாடுகளும் முயற்சிகள் மேற் கொண்டு வருகின்றன. என்றாலும், இஸ்ரேல் நடத்தியுள்ள தாக்குதலுக்கு பதிலடியை கொடுக்க ஈரான் தயாராகி விட்டது.

இதற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ளும் உத்தரவுகளை இப்ராஹிம் ரைசி, அந்நாட்டு இராணுவத் தளபதிக்கு பிறப்பித்துள்ளார். இத னால் வளைகுடா நாடுகளில் பதற்ற மான சூழ்நிலை தோன்றியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## யாழ்....

தலைமையில் நடைபெற்றது.

பீடாதிபதி தெரிவுக்காக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், கணக்கியல் துறை சிரேஷ்ட பேராசிரியருமான தி. வேல்நம்பி, விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கு. வேலாயுத மூர்த்தி மற்றும் விலங்கியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் க. கஜபதி ஆகியோர் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

பீடாதிபதி தெரிவுக்கு ஆர்வத்தை வெளிப்படுத்தியவர்களின் சுய சமர்ப்பணம் இடம்பெற்றது. இதன்போது இரண்டு பேராசிரியர்களே சுய சமர்ப்பணத்துக்கு வருகை தந்திருந்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்களிடையே இடம்பெற்ற வாக்களிப்பின் போது சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் முதனிலை பெற்று உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்குப் பீடாதிபதியாகச் செயற்படுவார் என தீர்மானிக்கப் பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# உமா ஓயா பணி தாமதம் 4,500 கோடி ரூபா இழப்பு!

கொழும்பு, ஏப். 21

அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல அரசியல் அழுத்தங்களினால் உமா ஓயா திட்டத்தை மக்களுக்கு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தினால் வருடத்துக்கு 900 கோடி ரூபா நாட்டுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் புனரமைப்பு தாமதமான 5 ஆண்டுகளில் 4,500 கோடி ரூபா நாட்டுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சாம்பூர் மின் உற்பத்தி நிலையம் புனரமைக்கப்படாவிட்டால் இலங்கைக்கு வருடாந்தம் 3,200 கோடி ரூபா நட்டம் ஏற்படும் - என்றார். (அ)

# வடமேல் மாகாண ஆளுநராக சனத் நிஷாந்தவின் மனைவி?

கொழும்பு, ஏப். 21

வாகன விபத்தில் காலமான முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவிக்கு வடமேல் மாகாண ஆளுநர் பதவி முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் விவாதிக்கப்படவுள்ள மாகாண ஆளுநர் திருத்தத்தில் இந்த பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் தற்போது தென் மாகாண ஆளுநராக பதவி வகிக்கும் வில்லி கமகே தனது பதவியில் இருந்து ஓய்வு பெறுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் வேறு மாகாணத்தின் ஆளுநர் பதவிக்கான முன்மொழிவுகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (அ)

# தமிழ் மக்களின் ஆதரவை ரணில் பெறவே முடியாது!

## டிலான் பெரேரா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 21

ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை அவரால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற முடியாது என்று சஜித் அணி பக்கம் தாவியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் உள்ள வாக்காளர்களில் 40 வீதமானோர் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை. 60 சதவீத வாக்குகளை வைத்துத்தான் கருத்துக் கணிப்புகள் வருகின்றன. அது உறுதியான முடிவாக அமையாது.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள், ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை அவருக்கு ஆதரவு வழங்கமாட்டார்கள். எனவே, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள மக்களுள் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தி பக்கம்தான் தற்போது நிற்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க எப்படித்தான் முயற்சித்தாலும் ராஜபக்ஷக்களுடன் இருக்கும் வரை அவரின் முயற்சி வெற்றியளிக்காது.

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் என்னைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு வரவேற்பு உள்ளது. அம்மக்களின் உரிமைக்காக முன்னின்றவன் நான். அதனால் சிங்களப் புலி என்றுகூட முத்திரை குத்தினர்-என்றார். (அ)

# ஈரான் ஜனாதிபதியின் விஜயம் குறித்து எதிர்ப்பை வெளியிட்டதா அமெரிக்கா?

கொழும்பு, ஏப். 21

**ஈரானிய ஜனாதிபதியின் இலங்கை விஜயம் தொடர்பில் அமெரிக்கத்தூதரக அதிகாரிகள் வெளிவிவகார அமைச்சிடம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரய்ஷி ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

சுமார் 529 மில் லியன் டொலர் பெறுமதியில் ஈரானின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டிருக்கும் உமா ஓயா திட்டத்தைத் திறந்துவைப்பதே அவரது விஜயத்தின் நோக்கம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஈரானால் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட வான் வழித் தாக்குதலை அடுத்து பிராந்தியத்தில் நிலவும் பதற்றநிலைக்கு மத்தியிலேயே ஈரானிய ஜனாதிபதியின் இலங்கை விஜயம் குறித்த செய்தி வெளியானது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரய்ஷியின் இலங்கை விஜயம் தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் உயர் மட்ட அதிகாரிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருப்பதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகள் கடந்த 16 ஆம், 17 ஆம் திகதிகளில் வெளிவிவகார அமைச்சுக்கு விஜயம் மேற்கொண்டதாகவும், இதன்போதே அவர்கள் ஈரானிய ஜனாதிபதியின் வருகை தொடர்பில் எதிர்ப்பை வெளிப்படுத்தியதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உக்ரைன் போரில் இலங்கையர்கள் ஈடுபட்டதற்கு எந்த ஆதாரமுமில்லை

## ரஷ்யத் தூதரகம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 21

உக்ரைன் போரில் இலங்கையர்கள் ஈடுபட்டதாக கூறப்படுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை என கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம் அறிவித்துள்ளது.

அத்துடன், உள்ளூர் ஆட்சேர்ப்பு நிறுவனம் குறித்து எதுவும் தெரியாது எனவும் தூதரகம் அறிவித்துள்ளது.

போர் வலயத்திலிருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்படும் ஒருவர் இலங்கைக்குத் திரும்பியதில் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் தூதரகம் மறுத்துள்ளது.

இது குறித்து தூதரகம் வெளியிட்ட அறிவிப்பில்-

ரஷ்யாவின் பிரதேசத்தில் இலங்கை பிரஜைகளின் நலன்கள் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பது மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டது .

அதேநேரம், இலங்கையர்களுக்கு கொழும்பில் உள்ள தூதரகப் பிரிவினால் விசா வழங்கப்படுவது அவசியமானது.

விண்ணப்பதாரர்களின் செல்லுபடியாகும் ஆவணங்களின் அடிப்படையில், இராணுவ நடவடிக்கைகளுடன் எந்த தொடர்பும் இல்லாத அவர்களின் பயண இலக்குகளை தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

அத்தகைய நோக்கங்களைக் கொண்ட நபர்கள் ரஷ்யாவுக்கு நுழைவதைத் தடுக்க, தூதரகம் விண்ணப்பதாரர்களுடன் கூடுதல் நேர்காணல்களை நடத்துகிறது.

இருப்பினும், இலங்கையர்கள் தங்கள் பயண இலக்கையோ அல்லது ரஷ்யாவில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் தன்மையையோ மாற்ற முடிவு செய்தால், நாங்கள் அவர்களைத் தடுக்க முடியாது.

கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம் இலங்கையில் உள்ள ரஷ்ய பிரஜைகளின் பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருக்கும்.

அதே வேளையில், ரஷ்யாவில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் தொடர்பான பிரச்சினைகள் மொஸ்கோவில் தொடர்புடைய இராஜதந்திர பிரதிநிதித்துவத்தின் திறனுக்குள் அடங்கும்.

இலங்கையிடமிருந்து உத்தியோகபூர்வ கோரிக்கை கிடைத்தால் மேலதிக தகவல்களை வழங்க தூதரகம் தயாராக உள்ளது - என்றுள்ளது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையும் சு.க. அணியினர்

## கூறுகின்றார் சந்திம வீரக்கொடி



கொழும்பு, ஏப். 21

சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள நிலைமை கவலைக்குரியதாகும். அக்கட்சியின் ஆதரவாளர்கள் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் வேகமாக இணைந்து கொண்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைக்கும் அனைத்தையும் செய்யக் கூடிய நிலைமையே தற்போது காணப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்டது. பாராளுமன்றத்தில் சபாநாயகரும் கைப்பாவையாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். அதே போன்று நிகழ்நிலை காப்பு சட்ட மூலமும் நிறைவேற்றப்பட்டது. தேசபந்து தென்னக் கோன் பொலிஸ்மா அதிபராகவும் நியமிக்கப்பட்டார்.

வரவு - செலவு திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டுக்கமைய டிசெம்பர் 31ஆம் திகதி வரை அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் ஜூலை மாதத்துக்கு முன்னர் அவற்றை நிறைவு செய்யுமாறு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் அதிகாரம் குறித்த காலப்பகுதியுடன் நிறைவடைய உள்ளமையினாலேயே இந்த அறிவித்தல் விடுக்கப்பட் டுள்ளது. இந்த முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமெனில், ஆட்சியில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய அரசாங்கத்துக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று 5 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலைமையிலும் அதன் பின்னணியிலுள்ள உண்மையான சூத்திரதாரிகளை அடையாளங்காண முடியாமல் போயுள்ளது. தற்போது தேர்தல் அண்மிப்பதால் வெவ்வேறு விடயங்களைக் கூற ஆரம்பித்துள்ளனர்.

நாடு தற்போதுள்ள நிலைமையில் எந்த கட்சி வேண்டும் என்பது மக்களின் பிரச்னை அல்ல. மாறாக நாட்டை கட்டியெழுப்பக் கூடிய தலைவருடன் ஒரு பலம் மிக்க குழுவே அவசியமாகும் - என்றார். (அ)

# “சந்திரிகாவின் கருத்துக்கள் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை”

கொழும்பு, ஏப். 21

ராஜபக்சக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிடும் கருத்துகளை கவனத்தில் எடுத்துக்கொள்ள தேவையில்லை என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய தேசியக்கட்சி பக்கம் சாய வைத்து பொதுவேட்பாளராக அவரை களமிறக்கினார். ஆனால் இன்று மாறுபட்ட கருத்தை வெளியிடுகின்றார்.

ஆகவே, ராஜபக்சக்கள் தொடர்பிலும் அவர் வெளியிடும் கருத்துகள் குறித்து அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.